இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) (தொடர்-2) பக்கம் 3

இவ்வுலக வாழ்கை நிலையற்றது பக்கம் 9

எனது இலண்டன் பயணம் பக்கம் 13

பராஹீனே அஹ்மதிய்யா (தொகுதி 1, 2) (தொடர்-2) பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | November 2025 | Vol. 4 - Issue No. 12



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005

Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311

அக்ஸா மஸ்ஜித்
காதியான்



# திருக்குர்ஆன்

وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ

இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றக்கூடிய தற்காலிகப் பொருள்கள் அல்லாமல் வேறில்லை. (3:186)



# ஹதீஸ்

وعن عبد الله بن مسعود، رضي الله عنه، قال: نام رسول الله ﷺ ، على حصير، فقال وقد أثر في جنبه. قلنا: يا رسول الله لو اتخذنا لك وطاء! فقال: " مالي وللدنيا؟ ما أنا في الدنيا إلا كراكب استظل تحت شجرة ثم راح وتركها".

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு வைக்கோல் விரிப்பில் உறங்கி, உடலில் பதிந்த அடையாளங்களுடன் எழுந்தார்கள். இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்காக ஒரு மென்மையான படுக்கையை விரிக்க எங்களுக்கு அனுமதிப்பீர்களா?” என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், “எனக்கும் உலகத்திற்கும் என்ன சம்பந்தம்? ஒரு மரத்தடியில் நிழலுக்காக உட்கார்ந்து, அதை விட்டு விலகிச் செல்கின்ற ஒரு பயணியைப் போன்றவன் நான்” என்று பதிலளித்தார்கள். (திர்மிதி, ரியாதுஸ் ஸாலிஹீன் – 38870)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)



## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

2

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

மனிதனுக்கு பேசும் ஆற்றலை வழங்கியவனும், மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் பண்பைக் கற்றுக் கொடுத்தவனு -மாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழ்களும் பொருத்தமானவையாக இருக்கின்றன. மேலும் மனிதனின் பேச்சை (இறைவன்) மறைவான தனது அழகின் தோற்றமாக ஆக்கினான். மேலும் தனது இல்ஹாமின் மூலமாக இறைஞானிகளின் இரகசியங்களுக்கு நுண்ணிய தன்மையை வழங்கினான். மேலும் தனது அருட்கொடையால் ஆன்மிக மக்களின் ஆன்மாக்களை முழுமைப்படுத்தினான். மேலும் தனது ஆதரவினால் அவர்களின் ஒவ்வொரு விஷயத்திற்கும் பாதுகாவலன் ஆனான். மேலும் தனது உதவியின் நிழலை அவர்களுக்கு வழங்கினான். மேலும் தனது நேசர்களுடன் பகைமை பாராட்டுபவர்களுடன் அவன் பகைமை பாராட்டினான். மேலும் அச்சத்தின் தருணங்களில் அவன் (தனது நேசர்களாகிய) அவர்களை உதவியற்றவர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் விட்டு விடவில்லை. மேலும் அவர்கள் அவன் பக்கம் முழுமையாக கவனத்தைத் திருப்பியபோதெல்லாம், அவன் அவர்களின் துஆக்களுக்கு செவிமடுத்தான். மேலும் அவர்களுக்காக தனது தன்மானத்தைக் காட்டினான்.

மேலும் சிங்கம் தன் குட்டிகளுக்காக இருப்பது போன்று, அவன் அவர்களுக்காக ஆகி விட்டான். மேலும் உற்றார், உறவினர்களைப் போன்று ஒவ்வொரு போர்க்களத்திலும் அவன் அவர்களின் பக்கம் கருணையுடன் கவனம் காட்டினான். மேலும் எந்தவோர் இடத்திலும் அவன் அவர்களை விட்டு தனிமையாகவுமில்லை; துஆவில் மன்றாடிய நேரத்தில் அவன் அவர்களை மறந்துவிடவு -மில்லை. அவன் இறையச்சத்தின் கூற்றை அவர்களுடன் இருப்பதைக் கட்டாயமாக்கி வைத்தான். மேலும் அவர்களை நேரான பாதைகளில் உறுதியாக நிலைநிற்க வைத்தான். மேலும் தனது மிக உயர்ந்த இடத்தின் பக்கம் அவர்களை ஈர்த்துக் கொண்டான். மேலும் பார்க்கக் கூடிய அத்தகைய கண்களை அவன் அவர்களுக்கு வழங்கினான். புரியக் கூடிய அத்தகைய உள்ளங்களை அவன் அவர்களுக்கு வழங்கினான். வேலை செய்யும் அத்தகைய உடலுறுப்புகளை அவன் அவர்களுக்கு வழங்கினான். மேலும் அவன் அவர்களை எல்லா படைப்பினங்களின் புகலிடமாகவும், அனைத்து பிரபஞ்சங்களின் தொடரும் ஆன்மாவாகவும் ஆக்கினான். பிறகு தலைவர் இல்லாத இருக்கையைப் போன்று இருந்த காலத்தில் தோன்றிய அல்லது முழு நிலவும் மறைந்து விட்ட அந்த இரவைப் போன்று இருந்த காலத்தில் வந்த அந்த ரஸூல் (ஸல்) அவர்களின் மீது சாந்தியும், அருளும் உண்டாவதாக. அதில் மக்கள் ஏதாவது தஞ்சம் அடையும் இடத்தின் தேவையுடையவர்களாக இருந்த, பூமி வறண்ட காலத்திற்கு இரையாகி இருந்த, மழையின் குறைவின் காரணமாக வெறுங்கையாகி விட்டிருந்த அப்படிப்பட்ட காலத்தில் (ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகிய) அவர் தோன்றினார்.



பின்னர், குறித்த நேரத்தில் மழை இல்லாத காரணத்தால் எரிந்து விட்ட அந்த நிலத்தை அந்த ரஸூல் (ஸல்) செழிப்பாக்கி விட்டார். பஞ்சம் ஏற்பட்ட நிலத்தை தொடர் மழை உயிரூட்டி விடுவது போன்று, அவர் உள்ளங்களை உயிரூட்டி விட்டார். அதன் விளைவாக முகங்கள் பொலிவு பெற்றன. மேலும் அவர்களின் அழகும், எழிலும் மீண்டும் திரும்பி வந்தது. மேலும் இயல்புகளில் மறைமுகமாக இருந்த மேன்மை வெளிப்பட்டு விட்டன. மேலும் அவர்களின் வெள்ளியும், தங்கமும் வெளிப்பட்டு விட்டது. மேலும் நம்பிக்கை கொண்டவர் எல்லா வகையான பாவத்திலிருந்தும் தூய்மையாக்கப்பட்டனர். மேலும் பாவம்

எனும் இந்த இறக்கை வெட்டப்பட்ட பிறகு வானம் வரை பறந்து செல்லும் இறக்கை அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் அவர்களின் ஒவ்வொரு வேலையின் அடிக்கல்லும் இறையச்சத்தில் நாட்டப்பட்டது.

எனவே அல்லாஹ் அல்லாதவை, மன இச்சைகள் ஆகியவை ஓர் அணுவளவும் எஞ்சியிருக்கவில்லை. மேலும் சிலைகள் தவா.்.ப் (வலம் வருதல்) செய்யப்பட்டு வந்த மக்கத்து பூமி தூய்மையாக்கப்பட்டது. பின்னர் இன்று வரை



ஒருபோதும் அதில் (அருளாளன் எனும்) ரஹ்மான் ஆகிய இறைவனைத் தவிர எவருக்கும் சஜ்தா செய்யப்படவில்லை. எனவே மிகவும் அருள் பாலிக்கின்றவனும், ரஹ்மானும் ஆகிய இறைவனின் பண்புகளின் தோற்றமாக இருக்கின்ற, பேருதவி செய்கின்ற அந்த நபியின் மீது சலவாத் ஓதுங்கள். பேருதவிக்கான நற்கூலி பேருதவியே ஆகும். எந்த உள்ளம் அவர்களுடைய பேருதவிகளை அறியாமல் இருக்கின்றதோ, அது ஈமான் அற்றதாகும் அல்லது அது தனது ஈமானை வீணாக்கிக் கொண்டிருக்கிறது.


அல்லாஹ்வே! முன்னவர்களுக்கு கோப்பையை அருந்த வைத்தது போன்றே, பின்னவர்களுக்கும் அருந்த வைத்த எழுத்தறிவில்லாத அந்த ரஸூல், நபி மீது நீ அருள் புரிவாயாக. அவர் முன்னவர்களுக்கு அருந்தக் கொடுத்த அதே பழச்சாற்றையே பின்னவர்களுக்கும் அருந்தக் கொடுத்தார். மேலும் அவர் தனது பண்பாகிய அதே பண்பில் அவர்களை தோய்ந்து விடச் செய்து விட்டார். மேலும் அவர்களை தூய்மையானவர்களுடன் நுழைத்து விட்டார். பின்னர் அல்லாஹ் அவர்களை அன்பு எனும் ஒளிக் கதிர்களின் ஒளிர்வினால் ஒளிமயமாக்கி விட்டான். மேலும் மிகவும் கலப்படமற்ற மதுவை அருந்த வைத்தான். மேலும் அவர்களை அல்லாஹ்விடம் தம்மை மாய்த்துக் கொள்கின்றவர்களாகிய முந்திச் சென்றவர்களுடன் சேர்த்து விட்டான். மேலும் அவர்களுக்கு தனது நெருக்கத்தை வழங்கினான். அவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொண்டான். அவர்களின் உணர்வை மிகவும் நுண்ணியதாக ஆக்கினான். மேலும் அவர்களின் உள்ளங்களை ஒளிமயமாக்கி விட்டான். மேலும் தன் புறமிருந்து அவர்களுக்கு (இறை)நெருக்கம் பெற்றவர்களைப் பற்றிய புரிதலை வழங்கினான். அவர்களின் ஆன்மாக்களை பரிசுத்தமாக்கினான். மேலும் அவர்களின் உள்ளங்களின் செயல்பாடுகளை தூய்மையாகவும், சுத்தமாகவும் ஆக்கினான். மேலும் அவர்களின் ஆன்மாக்களை அலங்கரித்தான். மேலும் சிறையாளிகளின் சங்கிலிகளில் இருந்து அவர்களின் ஆன்மாக்களுக்கு விடுதலை வழங்கினான். மேலும் அவன் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுடன் நடந்து கொள்ளும் வழிமுறையைப் போன்றே, அவன் அவர்களின் அனைத்து விஷயங்களுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டான். மேலும் தனது வலிமார்களுடன் தொடர்ந்து இருந்து வரும் நடைமுறைக்கு ஏற்ப அவர்களின் நெஞ்சங்களுக்கு விரிவை வழங்கினான்.

மேலும் அவன் அவர்களை தனது சந்நிதியில் அழைத்தான். மேலும் அவன் தனது அருளால் அவர்களுக்காக உடனே வாசலைத் திறந்து விட்டான். மேலும் அவன் அவர்களை தனது கூட்டத்தில் சேர்த்து விட்டான். மேலும் தனது சுவர்க்கத்தில் வாழ்பவர்களுடன் அவர்களையும் இணைத்து விட்டான். பின்னர் நீங்கள் உங்களின் அசல் வீட்டிற்கு வந்து விட்டீர்கள். மேலும் நீங்கள் உங்களின் குடும்பத்தார்களை சந்தித்து விட்டீர்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது. மேலும் அவர்கள் அன்பிற்குரியவர்களுடன் சேர்க்கப்பட்டு விட்டனர். மேலும் இவையெல்லாம் கைருர் ருஸுல் (ரஸூல்மார்களில் சிறப்பானவரும்), காத்தமுன் நபிய்யீன் (நபிமார்களுக்கெல்லாம் முத்திரையானவரும்) ஆகிய முஹம்மது (ஸல்) அவர்களின் அருள்களினால் ஆகும். அல்லாஹ், அவனுடைய வானவர்கள், அவனுடைய நபிமார்கள் மற்றும் அவனுடைய அனைத்து நல்லடியார்களின் சலவாத் நபி (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக.

இதற்குப் பிறகு, உண்மையைத் தேடுபவர்களே! நீதிமான்களே! அறிவுள்ளவர்களே! சிந்திப்பவர்களே! நான் ரஹ்மான் ஆகிய இறைவனின் அடியார்களில், கடும் தேவையின் காலத்தில் அறியாமைகளும், பித்அத்துகளும் (மார்க்கத்தில் புதுமைகளும்) பரவி விட்ட, இறையச்சமும், இறைஞானமும் குறைந்து விட்ட சந்தர்ப்பங்களில் ஓரிறைவன் புறமிருந்து வருகின்ற ஓர் அடியார் ஆவேன் என்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். மேலும் கண்ணியத்திற்குரிய இறைவனின் கட்டளையால் கிழிந்தவற்றிற்கு புத்தாடையை அளிப்பதும், சிதறிக் கிடக்கின்றவற்றை ஒன்று சேர்ப்பதும், இல்லாமற்போய் விட்டதைத் தேடிக் கண்டு பிடித்து வெளிக் கொணர்வதும் ஆகிய நோக்கத்தை எடுத்துக் கொண்டவாறு இறங்குகின்ற அடியாராக இருக்கின்றேன். மேலும் அனைத்துலகங்களின் இறைவன் புறமிருந்து வழங்கப் -பட்டிருந்த வாக்குறுதியை நிறைவாகவும், முழுமையாகவும் நிறைவேற்றுவதற்காகவுமே நானும் வந்துள்ளேன். மேலும் நான் நம்பிக்கை கொண்டவர்களில் முதன்மையானவனாக இருக்கிறேன். மேலும் இஸ்லாமிய மார்க்கத்தின் சிதறுண்டு கிடக்கும் கட்டமைப்பை ஒன்று சேர்ப்பதற்காகவும், அல்லாஹ்வின் மறைநூலாகிய திருக்குர்ஆனையும், மக்களில் தலைசிறந்தவராகிய ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் மீது செய்யப்பட்ட தாக்குதல்களை நீக்குவதற்காகவும், கீழ்ப்படியாதவர்களின் தடியை முறித்து விடுவதற்காகவும், ஷரீஅத்தின் சுவர்களை

உறுதியாக்குவதற்காகவும் நான் இறைவனின் இந்த அருளுக்குரிய நூற்றாண்டின் தொடக்கத்தில் நியமிக்கப்-பட்டுள்ளேன் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெளிவாக விளக்கிக் கூறி விட்டேன். நானே வாக்களிக்கப்பட்ட மஸீஹூம், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியும் ஆவேன் என்பதை மக்களுக்கு நான் வெளிப்படுத்தியிருக்கிறேன். அவ்வாறே நான் (இறைவனால்) நியமிக்கப்பட்டுள்ளேன். நான் என்னைப் பரிபாலிப்பவனின் கட்டளைக்கு மாறு செய்வதற்கும், குற்றவாளிகளைச் சேர்ந்தவனாக ஆகுவதற்கும் எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

எனவே என்னை எதிர்ப்பதில் அவசரம் காட்டாதீர்கள். நீங்கள் இறையச்சம் உடையவர்கள் என்றால், எனது விவகாரத்தைப் பற்றி நன்றாக சிந்தித்துப் பாருங்கள். ஒரு நபர் அல்லாஹ்வின் புறமிருந்து வந்திருக்கும் நிலையில், நீங்கள் அவரை பொய்ப்படுத்தி விடும் சாத்தியம் இருக்கிறது. உண்மையில் ஸாலிஹ் (எனும் நல்லவர்)களைச் சேர்ந்தவராக இருக்கும் ஒருவரை தீயவர் என ஒருவேளை நீங்கள் குறிப்பிட்டு விடுவதற்கு சாத்தியம் இருக்கிறது. தூய தோட்டங்களையும், அசுத்தத்தின் குவியலில் முளைத்திருக்கும் பச்சைக் காய்கறிகளையும் நான் வித்தியாசப்படுத்திக் காட்டும் வகையிலும், வழிதவறிய சமுதாயத்திற்கு உண்மையின் வழியைக் காட்டும் வகையிலும் நிச்சயமாக அல்லாஹ் என்னை இக்காலத்தின் குழப்பம் செய்பவர்களை சீர்திருத்துவதற்காக நியமித்திருக்கிறான். எனது இந்த வாதம் பொருத்தமற்ற காலத்தில் அல்ல. மாறாக, பொருத்தமான தனது காலச் சூழலில் பொழிகின்ற வசந்த காலத்தின் மழையைப் போன்று நான் வந்திருக்கின்றேன். உண்மையைத் தேடுபவர்களுக்கு என்னிடம் என் இறைவனிடமிருந்து சாட்சிகளும், பார்வை உடையவர்களுக்கு மிகத் தெளிவான அடையாளங்களும் இருக்கின்றன. மேலும் அறிவுக் கூர்மையுள்ளவர்களுக்கு உண்மையாளர்களைப் போன்ற முகம் இருக்கிறது. அல்லாஹ்வின் வாக்களிக்கப்பட்ட நாள்கள் வந்து விட்டன. மேலும் தேடுபவர்களுக்கு கருணையின் வாசல்கள் திறந்து விட்டன. எனவே நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த அருட்கொடைகளை நீங்களே முதலில் மறுப்பவர்களாக ஆகி விடாதீர்கள்.



இப்போது மறைவான விஷயம் எங்கே இருக்கிறது? எனவே அறிவுள்ளவர்களே! உங்களின் கண்களைத் திறங்கள். வானமும், பூமியும் எனக்கு சாதகமாக சாட்சி பகர்ந்து விட்டன. நம்பத்தகுந்த அறிஞர்கள் என்னிடம் வந்து விட்டனர். இறைஞானிகளின் உள்ளங்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டன. மேலும் தோட்டங்களில் சுத்தமான தண்ணீரின் குழாய்கள் ஓடுவதைப் போன்று, (நம்பத்தகுந்த அறிஞர்களாகிய) அவர்களின் உள்ளங்களின் நாளங்களில் உறுதித்தன்மை உள்ளே ஊடுருவி விட்டது.

ஆயினும் இந்த (இந்திய) நாட்டின் சில ஆலிம்கள் குறுகிய மனப்பான்மை, ஆணவம் ஆகியவற்றின் காரணமாக என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு அவர்கள் நம் மீது அநீதியிழைக்கவில்லை. மாறாக, பொறாமை, அகங்காரம் ஆகியவற்றின் காரணத்தால் அவர்கள் தமது உயிர்களின் மீது அநீதியிழைத்துக் கொண்டனர். மேலும் அவர்கள் அறிவீனம் எனும் இருள்களின் மீது திருப்தி கொண்டு விட்டனர். மேலும் அறிவையும், ஒளியையும் விட்டு விட்டனர். எனவே அவர்களின் பேச்சிலும், அவர்களின் நடத்தையிலும், அவர்களின் பண்பிலும் எந்த அளவுக்கு இருள்கள் உறுதியாக சூழ்ந்து கொண்டனவென்றால், வவ்வால்கள் அவர்களின் உள்ளங்களில் முகாமிட்டு விட்டன. அழகாகப் பாடும் பறவை அவர்களின் கிளைகளில் தமது இரவின் தங்குமிடத்தை ஆக்கிக் கொண்டது. ஆனால் இதற்கு முன்னர் அவர்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மஸீஹின் வருகையின் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். மக்கள் பெருநாளின் பிறையை அல்லது ஏதாவது ஒரு விருந்தில் அருமையான உணவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போன்று அவர்கள் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் பின்னர் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தது அவர்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டுவிட்டபோது, வேண்டப்பட்ட பொருள் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டபோது அவர்கள் அல்லாஹ்வின் சொல்லை மனிதனின் இட்டுக்கட்டு என்று நினைக்கத் தொடங்கினர். இவர் இட்டுக்-கட்டிக் கூறுபவர் ஆவார். இவர் ஷைத்தானைப் போன்று மக்களை வழிகெடுக்கிறார் என்று கூறத் தொடங்கினர். மேலும் அவருடைய மகத்துவத்தைப் பற்றியும் - ஏன் அவருடைய ஈமானைப் பற்றியும் சந்தேகம் கொள்ளத் தொடங்கினர்.

அவர்கள் அவருடைய சீடர்கள், உதவி செய்பவர்கள் உட்பட அவரைப் பொய்ப்படுத்தினர். மேலும் அவரை தீயவர் என்றும், கா.:.பிர் என்றும் குறிப்பிட்டனர். அல்லாஹ் அதிகமாக அடையாளங்களை இறக்கினான். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தொடக்கத்திலும், இறுதியிலும் ஆதரவுகளைக் காட்டினான். ஆனால் அவர்கள் எந்த கவனமும் செலுத்தவில்லை. மேலும் அவரை பொய்யர் என்று கூறினர். ஆனால் பொய்யர்களின் முடிவைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்கவில்லை. மேலும் அவர்கள் அவரை இட்டுக்கட்டிக் கூறுபவர் என்றனர்; ஆனால் முன்னர் வந்து சென்று விட்ட இட்டுக்கட்டிக் கூறுபவர்களை அவர்கள் முன் நிறுத்திப் பார்க்கவில்லை. பரிதாபம்! நூறு பரிதாபங்கள்!! அவர்கள் கூறுகின்றனர்தான். ஆனால் கேட்பதில்லை; மேலும் ஆட்சேபனை செய்கின்றனர்; ஆனால் விடையைக் கேட்க செவிசாய்ப்பதில்லை. குறைகளைக் கூறுகின்றனர்; ஆனால் ஆய்வு செய்வதில்லை. உண்மை தெளிவாக முன்னால் வந்து விட்டது; ஆயினும் அவர்கள் பார்ப்பதில்லை. அவர்கள் ஒரு குற்றமற்றவரின் மீது அவதூறு கூறும்போது சிரிக்கின்றனர்; அழுவதில்லை. அவர்கள் அஞ்சாமல் இருப்பதற்கு அவர்களுக்கு என்ன ஆகி விட்டது? அவர்களிடம் கேள்வி கணக்கு கேட்கப்பட மாட்டாது என்று

நெறிநூல்களில் அவர்களுக்கு விடுதலைக்கான ஏதாவது உத்திரவாதம் இருக்கிறதா?

நான் அவர்களின் உள்ளங்களில் இறையச்சத்தைக் காணவில்லை. மாறாக, அவர்கள் உண்மையாளர்களுக்கு துக்கம் கொடுக்கின்றனர். கொஞ்சமும் பொருட்படுத்துவ-தில்லை. நான் அவர்களின் உள்ளம் எனும் முற்றத்தில் பரந்த தன்மையைக் காணவில்லை. அவர்கள் தம்மைப் போன்ற நண்பர்களைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கின்றனர். மேலும் அறிந்து கொண்டே குறை கூறுகின்றனர்; புறங்கூறுகின்றனர். அவர்களின் பேச்சு, ஒரு பறவை கழிவை வெளியேற்றுவதைப் போன்று இருக்கிறது. அல்லது எச்சிலை உமிழ்ந்து கொண்டு திரிந்து கொண்டிருக்கும் காச நோயாளியைப் போன்று இருக்கிறது. இவர் நமது விவகாரத்தின் ஆழம் வரை அறிவதில்லை. மேலும் நமது இரகசியத்தின் உண்மைத்துவத்தை அறிவதுமில்லை.

அவர்கள் அல்லாஹ்வின் நெறிநூலை புரியாமல் பொய்ப்படுத்துகின்றனர். வசை மாறி பொழிகின்றனர். முட்டாள்தனமான பேச்சுகளைப் பேசுகின்றனர். ஆயினும் நாய்கள் குறைப்பது போன்று அல்ல. மாறாக, அதை விட அதிகமாக இருக்கிறது. அவர்களை நேரான வழி வரை கொண்டு செல்கின்ற அத்தகைய புரிதல் எஞ்சியிருக்க-வில்லை. அவர்களை ரஹீம் (மேன்மேலும் கருணை காட்டுபவன்) ஆகிய இறைவனுடைய திருப்தியின் வழிகள் வரை இழுத்துக் கொண்டு வருகின்ற அந்த பயம் இல்லை. அவர்களில் சிலர் நேர்மையை விரும்புபவர்கள் ஆவர். அவர்கள் அறியாமையின் காரணமாக பொய்ப்படுத்து-கின்றனர். சிலர் தமது நாவுகளை தடுத்து வைத்துக் கொள்கின்றனர்; வசைபாடுவதில்லை. ஆனால் அவர்களில் பலரை நீர் பயமின்றி நமக்கு எதிராக மானக்கேடான விஷயங்களைப் பேசுபவர்களாகவும், நம்மை மறுப்பவர்களாக-வும், வசைபாடுபவர்களாகவும் காண்பீர்.

எனவே இஸ்லாத்தின் இந்தத் துன்பத்திற்காகவும், இந்தக் காலத்தின் சோதனைகளுக்காவும் அழுகின்றவர்கள் நன்றாக அழ வேண்டும். இந்த ஆலிம்களின் சோதனையை விட அதிகமான சோதனை வேறு என்ன இருக்கிறது? ஏனெனில் இந்த ஆலிம்கள் மார்க்கத்தை கர்பலாவின் ஷஹீதுகளைப் போன்று கேட்பாரற்ற அவல நிலையில் விட்டு விட்டனர். இது நமது உள்ளங்களை உருக்கி விட்டதும், முன்னவர்களை துயரம் கொண்டவர்களாக ஆக்கி விட்டதும், நமக்காக நமது வேலைகளை கடினமாக்கி விட்டதும் ஆகிய அப்படிப்பட்ட நெருப்பு ஆகும். மேலும் அறிவீனர்களின் அறிவீனமான விஷயங்களால் அல்லாஹ்வின் மறைநூலின் மீது கல்லெறிந்திருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலான-வர்கள் உண்மையை மறைக்கும் வேலையை செய்து கொண்டிருக்கின்றனர் என்பதையும், சாலிஹீன் (நல்லவர்-களைப்) போன்று அவர்கள் பொய்யிலிருந்து விலகுவதில்லை என்பதையும், மார்க்கத் தீர்ப்பு கொடுக்கும் நேரத்தில் அவர்களின் நாவுகள் பொய் பேசுகின்றன என்பதையும் நாம் காண்கின்றோம்.

அவர்கள் தமது இயல்புகளை இருள்களின் திரைகளில் மறைத்து வைத்திருக்கின்றனர். மேலும் அவர்கள் தொழுகையின் மீதுள்ள அன்பை விட (மக்கள் தமக்கு வழங்கும்) அன்பளிப்புகள் எனும் செல்வங்களுக்கு முன்னுரிமை கொடுத்து விட்டனர். இந்த அற்ப உலகிற்காக அவர்கள் திருக்குர்ஆனை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டனர். மேலும் தமது இயல்புகளை பௌதிக கருவூலங்களின் பக்கம் குனிய வைத்திருக்கின்றனர். மேலும் அழிந்து போகும் இன்பங்களுக்காக அவர்களின் பேராசையும், விருப்பமும், இன்பமும் மிகவும் கடுமையாகி விட்டது. மேலும் மன விருப்பங்களில் அவர்களின் பேராசை எல்லா எல்லைகளையும் கடந்து சென்று விட்டது. அவர்களிடம் அல்லாஹ்வின் மறைநூலாகிய ஃபுர்கானைப் பற்றிய அறிவும் எஞ்சியிருக்கவில்லை. உள்ளங்களின் தக்வாவும், ஈமானின் இன்பமும் எஞ்சியிருக்கவில்லை. நன்மையான செயல்கள், நேர்வழி, சீர்திருத்த செயல்கள் ஆகியவற்றிலிருந்து அவர்கள் மிகவும் தொலைவில் சென்று விட்டனர். மேலும் வெற்றியின் பாதைகளிலிருந்து விலகி அழிவின் பாதைகளில் நடந்து சென்று விட்டனர். அவர்களின் ஈமான் எனும் நெருப்பு சாம்பலாகவும், அவர்களின் நன்மை, பயன் ஆகியவை குழப்பமாகவும் மாறி விட்டது. அவர்கள் நன்மையிலிருந்தும், நல்லவற்றிலிருந்தும் எவ்வளவு தொலைவில் சென்று விட்டனர் என்றால், அவர்கள் ஒருவர் மற்றவருக்கு எதிரியாக இருக்கின்றனர்.

மேலும் அவர்கள் இப்லீஸுக்காக சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட சிறைப்பிடிக்கப்பட்டவர்களைப் போன்று ஆகி விட்டனர். அவர்கள் சிறைச் சாலைகளின் பக்கம் இழுத்துக் கொண்டு வரப்பட்டவர்களைப் போன்று, பொய்யின் பக்கம் அவர்கள் இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் தமது மார்க்கத் தீர்ப்புகளில் நம்பிக்கை துரோகம் செய்கின்றனர். இறையச்சத்தை மேற்கொள்வதில்லை. அவர்கள் பொய்

உண்மையைத் தேடுபவர்களே! நீதிமான்களே! அறிவுள்ளவர்களே! சிந்திப்பவர்களே! நான் ரஹ்மான் ஆகிய இறைவனின் அடியார்களில், கடும் தேவையின் காலத்தில் அறியாமைகளும், பித்அத்துகளும் (மார்க்கத்தில் புதுமைகளும்) பரவி விட்ட, இறையச்சமும், இறைஞானமும் குறைந்து விட்ட சந்தர்ப்பங்களில் ஓரிறைவன் புறமிருந்து வருகின்ற ஓர் அடியார் ஆவேன் என்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். [ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)]

கூறுகின்றனர். கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் அல்லாஹ் ஹராமாக்கியவற்றிற்கு (விலக்கிய -வற்றிற்கு) அருகில் வருகின்றனர்; அவற்றிலிருந்து விலகுவதில்லை.

அவர்கள் உண்மையான விஷயங்களைக் கேட்பதில்லை. மாறாக, உண்மை பேசுபவர்களின் இரத்தத்தை சிந்த வேண்டும் எனவும், அவர்களை நாசமாக்கி விட வேண்டும் எனவும் அவர்கள் விரும்புகின்றனர். அவர்களின் மனம் விரும்பாமல் இருந்த போதனையை இமாம் அவர்களிடம் கொண்டு வந்தபோது அவர்கள் அவரை தெரிந்து கொண்டே கொலை செய்ய உறுதியாக எண்ணம் கொண்டனர். ஆனால் பொதுவான மனிதன் கூட இறைவனின் அனுமதியின்றி மரணிக்க முடியாதபோது, அல்லாஹ்வின் தூதரை அவர்கள் எப்படி கொல்ல முடியும்? சதித் திட்டம் தீட்டுபவர்கள் எவ்வளவுதான் சதித் திட்டம் தீட்டினாலும், நிச்சயமாக அல்லாஹ் தன் புறமிருந்து தனது அடியார்களை பாதுகாக்கிறான். நாங்கள் இஸ்லாத்தின் தொண்டர்கள் என்று அவர்கள் வாதம் செய்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், அவர்கள் கிறித்தவர்களின் பெரும்பாலான கொள்கைகளில் அவர்களுக்கு உதவியாளர்களாக ஆகி விட்டனர். மேலும் அவர்கள் தம்மைத் தாமே வேட்டையாடு -பவர்களுக்கான வலையாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் ஹதீஸ்களை அவற்றின் (அறிவிப்பாளர் -களின் வரிசைகள் எனும்) சனதுகளுடன் செவியேற்றிருக் -கிறோம் என்று (ஆலிம்களாகிய) அவர்கள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் தவ்ஹீதின் பொருளைக் கூட அறிவதில்லை. மேலும் நாங்கள் ஷரீஅத்தின் கட்டளைகளை நன்றாக அறிவோம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால் மார்க்க சான்றுகள் எனும் தெருக்களில் அவர்களின் காலடி கூட படவில்லை. அவர்கள் பேராசை, மனயிச்சை எனும் விண்வெளிகளில் புறாவைப் போன்று பறந்து கொண்டிருக்கின்றனர். மேலும் மரணத்தின் நேரத்தைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.

அவர்கள் அற்பமான உலக பயன்களுக்காக பலவிதமான நிம்மதிகளை இழந்தவாறு ஓடி அலைந்து கொண்டிருக்கின்றனர். மேலும் நயவஞ்சகர்களைப் போன்று ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் தனது தலையை வெளியே எடுக்கின்றனர். அல்லாஹ் தனது அருள் மற்றும் கருணையின் கையால் காப்பாற்றப்படுகின்றவர்களைத் தவிர பேராசையின் கடுமையின் காரணமாக அவர்கள் ஒவ்வொரு தட்டிலும், அதில் எலியின் இறைச்சி இருந்தாலும் விழுந்து விடுகின்றனர் (அல்லாஹ் தனது அருள் மற்றும் கருணையின் கையினால் காப்பாற்றப்படுகின்றவர்கள் ஆகிய) அப்படிப்பட்டவர்கள் மேற்குறிப்பிட்டதிலிருந்து விலகி இருப்பவர்களாக இருக்கின்றனர். மேலும் அவர்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை. மேலும் அவர்கள் மன்னிக்கப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். மிகப் பெரிய குழப்பங்களிலும், மிகப் பெரும் ஆபத்துகளிலும் ஒன்று, வேட்டையாடுபவர்களைப் போன்று தனது குறைகளைக் கூறுவது, குற்றங்களை வெளிப்படுத்துவது எனும் வில்களால் ஏவப்பட்டிருந்த கிறித்தவப் பாதிரிகளுடைய அந்த திடீர் தாக்குதலாகும். நமது மார்க்கத்தை காயப்படுத்துவதற்காக அவர்கள் உருவாக்கிய எந்த அம்புகளாக, வில்களாக இருந்தாலும் அவற்றிற்கான அடிப்படையை அவர்கள் அறிவின் அடிப்படையிலும், அனுமானத்தின் அடிப்படையிலும் வைக்கவில்லை. வேட்டைக்காரனைப் போன்று சதித்திட்டம், ஏமாற்றுவது ஆகியவற்றின் அடிப்படையில் வைத்தனர்.

அவர்கள் உண்மையை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டனர். மேலும் அவர்கள் தம்மால் இயற்றப்படும் நூல்களில் முற்றிலும் பொய்யை எழுதினர். மேலும் அவர்களின் எல்லா ஆற்றல்களும் இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்காக ஒன்று சேர்ந்து விட்டன. மேலும் சய்யிதுனா خَيْرُ الْأَنَامِ (கைருல் அனாம் - மனிதர்களில் மிகச் சிறந்தவர்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அடையாளங்களை அழிப்பதற்காக அவர்களின் கருத்துகள் ஒன்றுபட்டு விட்டன. (பாதிரிகள் ஆகிய) இவர்கள் இணைவைத்தல் எனும் வலையை விரித்து மக்களை கொளுந்து விட்டு எரியும் நெருப்பின் பக்கமும், அதன் ஆழமான பகுதிகளின் பக்கமும் அழைக்கின்றனர். சதித்திட்டம், ஏமாற்றுவது ஆகிய அவர்களுக்குக் கிடைத்த எல்லா ஆயுதங்களையும் அவர்கள் பயன்படுத்தினர். மேலும் எல்லா முயற்சிகளையும் அவர்கள் செயலில் கொண்டு வந்தனர்.

அவர்களின் போரில் சூடும், அவர்களின் ஈட்டி எறிவதிலும், வாள் வீச்சிலும் கடுமையும் உருவாகி விட்டது. அவர்களின் சங்குகளின் ஓசை முழங்கின. மேலும் எல்லா புறமிருந்தும் எக்காளம் ஊதப்பட்டன. அவர்களின் குதிரைகள் தமது ஓட்டத்தைக் காட்டின. மேலும் வெள்ளம் பெருக்கெடுத்தது. அவர்கள் தமது முயற்சிகளை எந்த எல்லை வரை கொண்டு சென்று விட்டனர் என்றால், மார்க்கத்தில் இல்ஹாது (என்ற ஆகாதவற்றை ஆகுமானவை -யாகவும், ஆகுமானவற்றை ஆகாதவையாகவும் கருதும் வழிமுறை) எனும் எல்லா படைகளையும் ஒன்று சேர்த்து



விட்டனர். மேலும் குழப்பத்தின் கொடியை உயர்த்தி(ப் பறக்க) விட்டனர். முஸ்லிம்களுக்கு துன்பங்கள் ஏற்பட்டன. மக்கள் குடியிருந்த பகுதிகள் நாசமாகி விட்டன. குடிப்பதற்காக அவர்களுக்குக் கண்ணீர் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. சுன்னத்தும் எஞ்சியிராத, ஜமாஅத்தும் எஞ்சியிராத அளவுக்கு அப்படிப்பட்ட பித்அத் (எனும்

மார்க்கத்தில் இல்லாத புதுமைகள்) பெருகி விட்டன. திருக்குர்ஆன் இல்லாமற்போய் விட்டது. மேலும் அதைப் பாதுகாப்பதற்கும், கண்காணிப்பதற்கும் ஆற்றல் இல்லாமல் போய் விட்டது.

சுருக்கமாக, இஸ்லாம் துக்கங்களால் நிரம்பி விட்டது. இருள்களின் வட்டங்கள் (இஸ்லாம் எனும்) அதை நாலாப்புறமும் சுற்றி வளைத்துக் கொண்டன. மேலும் அதன் சுவரை நாசமாக்குவதற்கு, காலங்கள் தனது வினோதமான -வற்றைக் காட்டின. மேலும் அதன் அடையாளங்களை அழிப்பதற்காக காலம் வெள்ளத்திற்கு மேல் வெள்ளத்தைக் கொண்டு வந்தது. இறைநியதி அதன் ஒளிகளை அணைப்பதற்கு தனது தீர்ப்பை அதன் முழுமை வரை கொண்டு சென்று விட்டது. இவையெல்லாம் படைத்து காத்தோம்புபவனின் விருப்பத்திற்கு முற்றிலும் ஏற்பவும், மறைவான ஞானங்களின் அடிப்படையிலும் நடந்தபோது எதிரிகளின் உறுதியான எண்ணத்தில் எந்த இடையூறுக்கும் வழி பிறக்கவும் முடியவில்லை; அவர்களின் கை அழுகிப் போகவும் இல்லை; அவர்களின் நாடுகளின் கூர்மை மழுங்கி விடவுமில்லை. இதன் ஒரு முடிவு என்னவானதென்றால், மார்க்கத்தில் பலவீனம் உருவாகி விட்டது. ஷரீஅத் சோர்வடைந்து விட்டது. மேலும் சூறாவளிக் காற்றும், வெள்ளமும் அதை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டது.

மேலும் அதற்கு எப்படிப்பட்ட அழிவு ஏற்பட்டு விட்டது என்றால், அதை அடையாளம் காண்பது இறைஞானம் கொண்டவர்களுக்கே சாத்தியமில்லாததாகி விட்டது. வீணானவை பெருகி விட்டன. மேலும் இறைஞானங்களுக் -கான பெயரும், அடையாளமும் எஞ்சியிருக்கவில்லை. மேலும் இ(ந்)த (இஸ்லாத்தி)ன் ஒளிகள் மங்கலானவையாகி விட்டன. மேலும் அதன் நட்சத்திரங்கள் எங்கேயோ தொலைவில் மறைந்து விட்டன. மார்க்கம் கால்களின் கீழே நசுக்கப்பட்டது. மேலும் அதன் துன்பங்களின் காலம் நீண்டதாகி விட்டது. இது பூட்டு போடப்பட்ட உள்ளங்களுக்கு தண்டனையாகவும், மூடப்பட்ட நெஞ்சங்களுக்கு அபராத -மாகவும் இருந்தது. எனவே ஏராளமான முஸ்லிம்கள் இறையச்சத்தை இழந்து விட்டனர். மேலும் தனது எஜமானனை கோபப்படுத்தி விட்டனர்.

நீர், அவர்களில் பலரை அவர்களின் செல்வம், சொத்து, வெள்ளி, தங்கம் ஆகியவற்றைப் பற்றிய ஆசை அவர்களை தன் மீது நேசம் கொண்டவர்களாக ஆக்கி விட்டன என்பதைக் காண்கின்றீர். மேலும் வெள்ளியின் மீதும், தங்கத்தின் மீதும் இருக்கும் ஆசை அவர்களின் உள்ளங்களில் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறன. மேலும் செல்வம், சொத்து பற்றிய கடுமையான ஆவல் அவர்களின் உள்ளங்களை தலைகீழாகப் புரட்டி விட்டன. அதன் காரணமாக அவர்கள் ரஹ்மானாகிய இறைவனிடம் இருந்து கவனமற்றவர்களாக ஆகி விட்டனர். நீர், அவர்களில் ஏராளமானவர்களை (ஆகாதவற்றை ஆகுமானவையாகவும், ஆகுமானவற்றை ஆகாதவையாகவும் கருதும் பிரிவினராகிய) முல்ஹிதுகளின் நறுமணத்தை தூக்கிக் கொண்டிருப்பதைப் போன்று காண்கின்றீர். மேலும் அவர்கள் கா∴பிர்களின் பண்புகளை ஒரு பயிற்சி கொடுக்கப்பட்ட குதிரைகளைப் போன்று பின்பற்றுகின்றனர். அரசாங்கம் வரை சென்றடை -வதற்கான வழி சாக்குக்போக்கு கூறுவது அல்லது போரும் சண்டையும்தான் என அவர்கள் கருதுகின்றனர். மாண்பு என்பது அம்புகளினால் மட்டுமே கிடைக்க முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர்களின் பார்வையில் வாளினாலும், ஈட்டியினாலும் இரத்தம் சிந்துவதைத் தவிர மார்க்கத்திற்கான ஆதரவுக்கு வேறு எந்தத் திட்டமுமில்லை.

(தொடரும்...)

# உண்மையான தவ்ஹீது

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

வெறும் நாவினால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறிவிட்டு மனதில் ஆயிரக்கணக்கான சிலைகள் ஒன்று திரண்டிருந்தால் அது தவ்ஹீது ஆகாது.

எந்த நபர் தன்னுடைய ஒரு செயல், தந்திரம், சூழ்ச்சி மற்றும் திட்டத்திற்கு இறைவனுக்கு நிகரான மகத்துவம் தருவாரோ அல்லது இறைவன் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையை யாராவது ஒரு மனிதன் மீது வைப்பாரோ அல்லது இறைவனுக்கு கொடுக்க வேண்டிய மகத்துவத்தை தனக்குக் கொடுப்பாரோ இந்த அனைத்து சூழ்நிலைகளிலும் அவர் இறைவனின் பார்வையில் இணைவைப்பாளர் ஆவார். தங்கம், வெள்ளி, பித்தளை அல்லது கற்கள் முதலியவற்றைக் கொண்டு செய்யப்படுகின்ற, மேலும் அவற்றின் மீது நம்பிக்கை வைக்கப்படுகின்ற அவை மட்டும் சிலைகள் அல்ல. மாறாக ஒவ்வொரு பொருளுக்கும் சொல்லுக்கும் செயலுக்கும் இறைவனுக்கு உரிமையான மகத்துவத்தை வழங்குவது இறைவனது பார்வையில் சிலையாகும்.......

இரண்டாவது, தனது நேசத்தை அவனுக்காக மட்டுமே குறிப்பாக கொண்டிருக்க வேண்டும். தனது வழிபாடுகளை அவனுக்காக மட்டுமே கொண்டிருக்க வேண்டும். தனது பணிவை அவனோடு மட்டுமே குறிப்பாக வெளிப்படுத்த வேண்டும். தனது எதிர்பார்ப்புகள் அனைத்தையும் அவனிடம் மட்டுமே கொண்டிருக்க வேண்டும். அவனுக்கு மட்டுமே அஞ்ச வேண்டும்.

(சிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன் கா ஜவாப் – ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 349,350)

# இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது !

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 13.09.1996 அன்று இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை

إِنَّمَا مَثَلُ الْحَيٰوةِ الدُّنْيَا كَمَآءٍ أَنْزَلْنٰهُ مِنَ السَّمَآءِ فَاخْتَلَطَ بِهٖ نَبَاتُ الْأَرْضِ مِمَّا يَأْكُلُ
النَّاسُ وَالْأَنْعَامُ ؕ حَتّٰٓى إِذَآ أَخَذَتِ الْأَرْضُ زُخْرُفَهَا وَازَّيَّنَتْ وَظَنَّ
أَهْلُهَآ أَنَّهُمْ قٰدِرُوْنَ عَلَيْهَآ ۙ أَتٰهَآ أَمْرُنَا لَيْلًا أَوْ نَهَارًا فَجَعَلْنٰهَا حَصِيْدًا
كَأَنْ لَّمْ تَغْنَ بِالْأَمْسِ ؕ كَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ

பொருள்: இவ்வுலக வாழ்க்கை மேகத்திலிருந்து நாம் பொழியச் செய்யும் தண்ணீரைப் போன்றதாகும். இதன் பின்னர் மக்களும் கால்நடைகளும் உண்ணுகின்ற பூமியின் விளைச்சல், அத்துடன் கலந்து விடுகிறது. எதுவரையெனில் பூமி (அதன் மூலம்) முழுமையாகச் செழுமையடைந்து அழகாகத் தோற்றம் அளிக்கிறது. மேலும் அதில் வாழ்பவர்கள் தாங்கள் (அதன் விளைச்சலை) ஒன்று திரட்டிக் கொள்ளத் தகுதி பெற்றதாக எண்ணுகின்றனர். அப்போது அதன் மீது இரவிலோ பகலிலோ நம்முடைய (ஆக்கினை பற்றிய) கட்டளை வருகிறது. நேற்று இவ்விடத்தில் (எதுவுமே) இல்லாதிருந்தது போன்று நாம் அதனை அறுவடை செய்த வயலைப் போல் ஆக்கி விடுகிறோம். சிந்தித்துச் செயலாற்றுபவர்களுக்கு இவ்வாறே நாம் (நம்முடைய) வசனங்களை மிகத் தெளிவாக விளக்குகின்றோம். (10:25)

இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. ஒரு நாள் பதிலளிப்பதற்காக இறைவன் முன் செல்ல வேண்டும் என்பது தொடர்பாக ஏராளமான வசனங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. நான் ஓதிய இந்த வசனம் மனித வாழ்க்கையின் எல்லா துறைகளையும் உட்கொண்டதாகும். இந்த உலகில் உள்ளதெல்லாம் நிலையற்றது எனவும், திடீரென அல்லாஹ்வின் தீர்ப்பு வருகின்றபோது அதிலிருந்து மனிதன் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது என்பதையும் அறிவுடையவர் எவரும் அறிவார்.

முழு உலகமும் இதனையே காட்டுகிறது. இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது என்பதை உணர்த்துவதற்காக இந்த வசனம் நம் கவனத்தை, உலகில் நம் வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள தண்ணீர் மற்றும் தாவரங்களின்பால் ஈர்த்துள்ளது. அல்லாஹ் கூறுகிறான்: இவ்வுலக வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு விண்ணிலிருந்து நாம் இறக்கிய தண்ணீரைப் போன்றதாகும். உலகில் ஆன்மிக வாழ்வின் அடிப்படையும், பௌதிக வாழ்வின் அடிப்படையும் தண்ணீரிலே அமைந்துள்ளது.

எனவேதான் அல்லாஹ் கூறினான்: வானத்தை அடிப்படையாக ஆக்கினான். இதற்கு முன் பூமியை விரிப்பாகவும் (2:23) என்று உள்ளதால் விரிவுரையாளர்கள் 'வானத்தை விதானமாகவும்' என மொழிபெயர்த்து விட்டனர். ஆனால் நான்



இதனை 'வானத்தை அடிப்படையாகவும்' என்றே மொழிபெயர்த்–துள்ளேன். ஆனால் 'வாழ்விற்கு' என அடைப்புக் குறிக்குள் சேர்த்து விட்டேன். அதாவது 'வானத்தை வாழ்விற்கு அடிப்படையாக ஆக்கினான்' என்று பொருள். பௌதிக வாழ்விற்குத் தேவையான தண்ணீரும், ஆன்மிக வாழ்விற்குத் தேவையான இல்ஹாமும் விண்ணிலிருந்துதான் இறங்குகிறது. எனவே இதுதான் பொருத்தமான பொருள்.

தொடர்ந்து அல்லாஹ் கூறுகிறான்: அந்த தண்ணீரின் மூலம் பூமியின் தாவரங்கள் கலந்து விட்டன. அதிலிருந்து மனிதனும் விலங்குகளும் உண்கின்றனர்; உட்கொள்கின்றன. அதாவது பொருத்தமான மண்ணில் நல்ல விதை இருந்தால் அதன் மேல் தண்ணீர் விழுகின்றபோது வாழ்வின் முதல் கட்டமாகிய தாவரங்கள் தோன்றுகின்றன. வாழ்வின் இரண்டாவது கட்டமான விலங்குகளும், வாழ்வின் கடைசி கட்டமான மனிதனும் வாழ வேண்டும் என்றால் தாவரங்கள் தேவை; தாவரங்கள் முளைக்க தண்ணீர் தேவை. தாவரங்களும் விலங்குகளும் இருந்தால்தான் மனிதன் வாழ முடியும். ஏதேனும் ஒன்று இல்லாவிட்டால் மனிதன் வாழ முடியாது. ஆக, மனிதனின் வாழ்வுதான் முக்கிய குறிக்கோள். அதற்காகவே முதலில் தண்ணீர்; அதன் பின் தாவரங்கள்; அதன் பின் விலங்குகள் பற்றி கூறியுள்ளான். இறுதி குறிக்கோள் மனிதனாகவும் அவன் அல்லாஹ்வோடு தொடர்பு கொள்வதுமாக உள்ளதால் அதிலிருந்து மனிதனும் உண்கிறான்; விலங்குகளும் உண்கின்றன என்று கூறினான்.

தொடர்ந்து கூறுகிறான்: எதுவரை என்றால் பூமி அதன் அலங்காரத்தை மேற்கொண்டு அழகு வாய்ந்ததாக ஆகின்ற போது அதில் வாழ்பவர்கள் இது நமக்கு சொந்தமாகி விட்டது.

இதனை பெற நம்மால் முடியும் எனக் கருதிக் கொள்கின்றனர். அப்போது நம்முடைய கட்டளை (அல்லது தீர்ப்பு) இரவிலோ, பகலிலோ வருகிறது. அப்போது நாம் அதனை அறுவடை செய்யப்பட்ட பின் எஞ்சியிருக்கும் சருகுகள் போல் ஆக்கி விடுகிறோம். இது எந்த அளவு என்றால் (நீண்ட நாள் வளர்ந்து செழித்து வந்தது) நேற்று கூட இங்கில்லாதிருந்தவாறு ஆகி விடுகிறது. சிந்தனை செய்யும் மக்களுக்காக நம் வசனங்களை நாம் இவ்வாறுதான் தெள்ளத் தெளிவாக விளக்குகிறோம்.

சிந்தனை செய்யும் மக்களுக்கு தெளிவாக விளக்கப் –பட்டுள்ளது என அல்லாஹ் கூறினான். எனவே சிந்தனை செய்யும் மக்கள் யார்? அவர்கள் சிந்தனை செய்து இதிலிருந்து தங்களின் இம்மை மறுமைக்காக என்னென்ன படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டார்கள் என நாம் கவனிக்க வேண்டும். ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களும், அவர்களின் மூலம் அருள் பெற்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதிலிருந்து ஏராளமான விஷயங்களை விளக்கிக் கூறியுள்ளார்கள். இங்கே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது எனக் கூறியதால் இதனை சாதாரணமாகப் படிக்கும் ஒவ்வொருவரும் இதனை முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம் என்று பொருள் அல்ல. மாறாக, இந்த வசனம் இறங்கியுள்ள ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களே முழுமையாகப் புரிந்துள்ளார்கள். அதன் பின் அவர் வழியில் முயன்று அல்லாஹ்விடமிருந்து இறைஞானம் பெற்றவர்தான் தெளிவு பெறுவார்கள். மற்றவர்கள் மேலோட்டமாக இதனைப் படித்தால் உதாரணமாக, விளைச்சல்கள் அழிந்து போவதைப் போலான ஒரு காட்சியைத் தவிர வேறு எதனையும் காண மாட்டார்கள்.



உண்மையில் இந்த வசனம் மனித வாழ்க்கையின் நிலையற்ற தன்மையையும் இயலாமையையும்தான் படம் பிடித்துக் காட்டுகிறது. அதாவது அல்லாஹ்வின் நாட்டமும் அவனது தீர்ப்பும் இல்லாமல் மனிதனால் ஏதும் பெற முடியாது என விளங்குகிறது. அல்லாஹ்வின் தீர்ப்பும் அவனது நாட்டமும் இன்றி மனிதன் இவ்வுலக அமைப்பிலிருந்தோ அல்லாஹ்வின் காத்தோம்பும் பண்பிலிருந்தோ எந்தப் பயனையும் பெற முடியாது. அல்லாஹ்வின் காத்தோம்பும் பண்பிலிருந்து பயனடைய உங்களுக்கு வாய்ப்பும் ஆற்றலும் தகுதியும் வழங்குவது முழுக்க அல்லாஹ்வின் அருளேயாகும்.

நிலையற்ற தன்மை என்பது மனித வாழ்க்கையின் இரு பகுதிகளையும் குறிக்கும். உலக விஷயத்திலும் கூட மனிதன் எவ்வளவுதான் முயற்சி செய்து பொருள்களைத் தயாரித்த போதிலும் அல்லாஹ்வின் நாட்டமின்றி பயன் பெற முடியாது. உலகச் செல்வத்தின் பின்னால் பாய்ந்து செல்பவர் பிறரை ஏமாற்றியும் பல வகையிலும் ஏராளமான செல்வத்தைச் சேர்த்துக் கொண்டாலும் இறக்கும் தருவாயில் எல்லாவற்றையும் இழந்தவராக ஏங்கித் தவித்தவராக உலகை விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதை செய்திகளில் காணலாம். இன்றைய நாளேட்டிலும் அப்படிப்பட்டவர்களைப் பற்றிய செய்திகள் வந்துள்ளது. ஏறக்குறைய எல்லா மனிதனின் வாழ்க்கை அனுபவத்தையும் பார்த்தால் மனிதன் தனக்கு ஒளிமயமான எதிர்காலம் கிடைப்பதற்காக, அமைதி பெறுவதற்காக சேர்த்துக் கொள்ளும் பொருள்கள் பெரும்பாலும் அமைதியையும் இன்பத்தையும் தராமல் வீணாகி விடுகின்றன.

இந்த நிலையற்ற தன்மைக்கு மார்க்கத்துடனும் ஆழமான தொடர்புண்டு. இறைவா! எனக்கு நேர்வழியில் உறுதியை வழங்குவாயாக. உண்மையில் உறுதியை வழங்குவாயாக என்ற துஆவைக் கற்றுத் தந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள். அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் துஆ செய்து வந்தார்கள். உலகில் நேர்வழியிலும் உண்மையிலும் மிகவும் உறுதியாக நிலைகொண்டவர்களான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவு எந்த அளவுக்கு இருந்தது என்றால், எனக்கு நேர்வழியிலும் உண்மையிலும் உறுதியை வழங்குவாயாக என துஆ செய்தார்கள். ஏனெனில் மேற்குறிப்பிட்ட வசனத்தின் பொருளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்தான் நன்கு உணர்ந்திருந்தார்கள். எனவே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஏன் இந்த துஆவை செய்கிறீர்கள் என்று சஹாபா கேட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், பாருங்கள்! இதயம் அல்லாஹ்வின் இரு விரல்களின் நடுவே உள்ளது. அதனை அவன் எப்போது வேண்டுமானாலும் திருப்பலாம் என்று கூறினார்கள். அதாவது மனிதனுக்கு சொந்தமானதும் அவன் விருப்பப்படி கையாளக் கூடியதுமான எந்தப் பொருளுக்கும் மனிதன் எஜமானன் இல்லை. எல்லாவற்றிற்கும் எஜமானன் அல்லாஹ்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈருலகிலும் எல்லா மனிதர்களுக்கும் – ஏன் – எல்லா நபிமார்களுக்கும் கூட தலைவராவார்கள். இதில் எந்த மாற்றமும் கிடையாது. எல்லாமே அல்லாஹ்வின் அருள்தான். இன்று இந்த மதிப்பு இருக்கிறது என்றால், இன்றைய இந்த நாளும் அருளுக்குரியது. அவன் அதனை மாற்றி விட்டால் மனிதனால் ஏதும் செய்ய முடியாது. மனிதன் மிகவும் இயலாதவன்; தகுதியற்றவன். அல்லாஹ்வின் அருள்தான் எல்லாமே!

மக்களுள் சிலர் மிகவும் நல்லவர்களாக மார்க்கமுடையவர் –களாக வாழ்நாள் முழுவதும் இருந்தும் கூட கடைசி வேளையில் மார்க்கத்தை விட்டு வெளியேறி காஃபிரான நிலையில் இருப்பதைக் காணலாம். அவ்வாறே சிலர் வாழ்நாள் முழுவதும்

மிகத் தீயவராக நடந்தும் கடைசி வேளையில் அல்லாஹ் அவரின் உள்ளத்தை மாற்றிவிட்டால் அவரின் சென்றகால பாவச் செயல்கள் எல்லாம் அழிந்து, அவர் ஒரு புதிய மனிதர் போன்று ஆகி விடுகிறார். இது அவரின் வாழ்வில் வருகின்ற ஒரு சிறு கியாமத்தேயாகும்.

இவ்வுலகம் நிலையற்றது எனக் கூறும் இவ்வசனம் நம்முடைய செயல்களை ஆராய்வதற்கு மிகவும் முக்கியமான –தாகும். மேலும் நம்முடைய இந்த சிறிது கால வாழ்க்கைக்காக நாம் ஏன் மக்களுக்கு கொடுமையிழைக்க வேண்டும்? ஏன் பிறரின் செல்வத்தை தகாத முறையில் பெற வேண்டும்? தனது செல்வம், செல்வாக்கு, ஆட்சி அதிகாரத்தின் ஆணவத்தை ஏன் காட்ட வேண்டும்? எப்படியிருப்பினும் இறக்கும் வேளையில் இவை அனைத்தையும் இழந்தவனாக அல்லவா போகிறோம் எனச் சிந்தனை செய்ய இந்த வசனம் தூண்டுகிறது. இறக்கும் வேளையில் நாம் சம்பாதித்த எல்லாவற்றையும் இழந்து விட்டவனாக, ஏன் நேற்று கூட என்னிடம் ஏதும் இருக்க –வில்லையே என்ற உணர்வோடுதான் நாம் போவோம் என்பது இறக்கும் ஒவ்வொருவருடைய நிலையுமாகும். எனவே இப்படிப்பட்ட உறுதியற்ற இவ்வுலகிற்காக இவ்வளவு கடுமையாக ஏன் உழைக்க வேண்டும்? மக்களுக்கு கொடுமையிழைத்து சாக்குப்போக்குகள் கூறிக் கொண்டே வாழ்க்கையின் பேராசைகளை நினைத்து கொடுமையுடன் மக்களை நசுக்குவது, ஆற்றலின் போதையால் தங்களின் சுற்றுச்சூழலின் உரிமைகளையும் பறித்துக் கொள்வதால் உலகமே ஏழையாகி விடும் அளவுக்கு செல்வத்தை திரட்டுவது இவை எல்லாம் ஏன்? அதாவது மனித இனத்தின் பயனுக்காக உள்ள செல்வத்தை நீங்கள் ஒரே இடத்தில் சேர்த்து வைத்தால் உங்கள் செல்வத்தால் உலக மக்கள் ஏழைகளாகி விடுவர். இன்றைய உலகின் நிலை இதுதான். இன்றைய எல்லா அழிவுக்கும் காரணம் இதுவேதான். அரசாங்கங்களைப் பார்த்தாலும், தனி மனிதனைப் பார்த்தாலும் இதுதான் நிலையாகும். செல்வத்தை சம்பாதிப்பதைத் திருக்குர்ஆன் தடுக்கவில்லை.

இந்த வசனத்தில் கூட தண்ணீர் மண்ணில் விழுந்து அதிலிருந்து விளைச்சல் தோன்றுதல், வளர்ந்து செழித்தல் பற்றியே கூறப்பட்டுள்ளது. எனவே உலகச் செல்வத்தை



சம்பாதிப்பதை விட்டு விட வேண்டும் எனக் குர்ஆன் கூறவில்லை. மாறாக தொடர்ந்து நடைபெறும் ஒன்றாக இதனைக் குறிப்பிட்டுள்ளது. தண்ணீர் இறங்குகிறது; மண்ணிலிருந்து வாழ்வாதாரத்தைத் தோற்றுவிக்கிறது. மக்களுக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் பயனடையச் செய்கிறது. அதன் பின் மீண்டும் விண்ணிற்குச் சென்று திரும்பி வந்து தொடர்ந்து செல்கிறது.

'அவர்களுக்கு வழங்கப்பட்டதிலிருந்து செலவிடுகின் –றனர்' என்பதன் மிக அழகான ஒரு காட்சியைக் காட்டுகிறது. இது இல்லாவிட்டால் வாழ்க்கை நிலைபெறவே முடியாது. அல்லாஹ் தண்ணீரின் உதாரணத்தைக் கூறியுள்ளதில் இந்தச் செய்தியும் அடங்கியுள்ளது. அதாவது நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தால், மேலான நோக்கங்களுக்காக உங்கள் ஆற்றல்களைப் பயன்படுத்தினால் அது ஒருபோதும் வீண் போகாது. உங்கள் கைகளிலிருந்து ஒருமுறை நழுவி விடும் தண்ணீர் மீண்டும் உங்கள் மேல் பொழியும். ஆனால் எல்லையற்ற அருள்களை விளைவித்த பின்னரே அந்த தண்ணீர் திரும்புகிறது. அந்த தண்ணீர் ஒரே இடத்தில் தேங்கி இருந்தால் நாற்றத்தைத் தான் ஏற்படுத்தும். அதனால் வாழ்வு கூட தோன்றாதவாறு அது நாசமாகி விடும். எனவே தண்ணீர் பொழிதல், அதனால் எல்லையற்ற அருள்கள் தோன்றுவதுமான இயற்கையின் இந்த விந்தையை மனிதன் கவனித்தால், அதாவது எவ்வளவு விளைச்சல்கள் அதனால் தோன்றினாலும் அல்லாஹ்வின் அனுமதியின்றி பயன்படுத்த முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டால் மனிதனது இவ்வுலக வாழ்க்கையின் முறையே மாறி விடும். அவனது நடைமுறைகள் மாறிவிடும். அவனது எண்ணங்கள் பல திசைகளில் செல்லத் தொடங்கும். அவன் உலகின் மக்களுக்கு பயன் தரும் வகையில் வாழ்வான். எப்பொழுதும் எந்நிலையிலும் விடைபெறத் தயாராக இருப்பான். ஒருவருக்கு விடைபெற்றுச் செல்ல வேண்டிய நேரம் எப்போது எனத் தெரிந்திருந்தால் அவர் எப்போதும் விடைபெறுவதற்கு ஆயத்தமாகவே இருப்பார்.

மஹாராஜா ரஞ்சீத் சிங் உடைய ஒரு சம்பவத்தை இதற்கு முன்னரும் நான் கூறியுள்ளேன். அவர் வெளிப்பார்வையில் மிகவும் கடினமானவராக இருந்தாலும் அகத்தளவில் இறைவனிடமிருந்து ஞானம் பெற்ற அறிவுக் கூர்மையுடைய நேர்மையுடைய சீக்கிய மன்னராக விளங்கியவராவார். அவர் மிகவும் நீளமான தலைப்பாகை அணிபவர். ஒரு நாள் அவர் தமது நீளமான தலைப்பாகையை தலையில் சுற்றிக் கொண்டிருக்கையில் அவருடைய அமைச்சர்களுள் முஸ்லிமாக இருந்த ஒருவர் கேட்டார்: மன்னரே! நீங்கள் இவ்வளவு நீளமான தலைப்பாகை அணிகிறீர்கள். இதற்கு மிகுதியான நேரம் தேவைப்படுகிறதே! எப்போதேனும் நீங்கள் தலைப்பாகை அணிந்து கொண்டிருக்கையில் ஏதாவது நிகழ்ந்தால் என்ன செய்வீர்கள்? அதனைக் கேட்டதும் அவர் கையிலிருந்த வாளைக் கொண்டு தலைப்பாகையை அந்த இடத்திலேயே துண்டித்து

விட்டார். அதாவது தேவையின் குரல் கேட்குமிடத்து தலைப்பாகையை முடித்துக் கொள்வேன் என்றார். எப்போதும் ஆயத்தமாக இருத்தல் என்பதை இந்த உதாரணத்திலிருந்தும் உணரலாம்.

வியாபாரங்கள் எப்பொழுதும் மனித வாழ்க்கையை விட நீளமானதாகும். பொருள்கள் நூறு வருடங்கள் வரை இருக்கலாம். ஆனால் மனிதனுக்கு நாளையைப் பற்றிய உறுதி இல்லை. எனவே இறைஞானமுடைய மக்கள் பொருள்களையும் தங்களது வாழ்வையும் நம்பியிருப்பதில்லை. எந்த நொடியிலும் இவ்வுலகை விட்டுச் செல்ல ஆயத்தமாக இருப்பர். அவர்கள் வெற்றி அடைவர். எந்நேரம் மரணம் வந்தாலும் அல்லாஹ்விடம் கணக்குச் சொல்ல ஆயத்தமாக இருப்பர். இந்தக் கருத்தை கவனிக்காமல் இது குறித்து அறிவற்றவராக வாழ்பவரது கணக்கு ஒரு நாளும் சரியாக இருப்பதில்லை. சிலரிடம் நீங்கள் கேட்டால் அவரது வியாபாரங்களில் அவர் மிகவும் கவனமாக இருப்பார். எந்நேரத்தில் அழைப்பு வந்தாலும், அதன் பின் மற்றவர்களுக்கு கஷ்டம் ஏற்படால் இருப்பதற்காக எதிர்காலத்தில் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி அறிவுரை செய்து வைப்பார். அதாவது நான் என்னென்ன செய்துள்ளேன். மேற்கொண்டு என்ன செய்ய நாடுகிறேன் எனக் கூறி வைத்திருப்பார். மற்றவர்கள் அதாவது கவனமற்றவர்கள் தங்களது இவ்வுலக விவரங்களையும் சமாளிக்க முடியாது. மறுமைக்காகவும் தயாராக இருக்க மாட்டார்கள். எந்த வகையான ஆயத்தமும் இன்றி மறுமையில் வருவார். எனவேதான் உள்ளத்தளவில் என்றும் ஆயத்தமாக இருக்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மறுமை எப்போது வரும் என ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமைக்காக ஆயத்தமாகி விட்டீர்களா? ஆயத்தமாகவில்லை என்றால் அது எப்போது வந்தால் உங்களுக்கென்ன? இந்தச் சிறு பதிலில் எவ்வளவு பெரிய விஷயத்தைச் சொல்லி விட்டார்கள்! கியாமத் வரும் என்பது உறுதி. ஆனால் அதற்காக நீங்கள் ஆயத்தமானால்தான் அது எப்போது என்ற கேள்வி எழும். உங்கள் கியாமத் இன்றும் வரலாம்; எந்த நொடியிலும் வரலாம். ஆயத்தம் என்றால் எந்நொடியிலும் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆயத்தமாகி விட்டால் இன்று வந்தாலும் எப்போது வந்தாலும் நீங்கள் மீட்புக்குரியவர்களாகவே இவ்வுலகிலிருந்து செல்வீர்கள். ஆயத்தமாகவில்லை என்றால் என்ன பயன்?

ஜமாஅத் இந்த விஷயத்தை எப்பொழுதும் கவனத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய ஏராளமான நல்லொழுக்கச் சிக்கலுக்கு காரணம் இந்த உணர்வின்மையாகும். அதாவது நாம் இந்த உலகில் நிலையாக தங்குவதற்காகவே வந்துள்ளோம் என மக்கள் கருதுகின்றனர். முழு உலகில் காணப்படும் அரசாங்கங்–களின் தீய நடத்தைக்கும் கொடுமை இழைத்தல்களுக்கும் காரணம் இந்த உணர்வின் குறையேயாகும். உலக ஆட்சியாளர்களுக்கு சில வேளைகளில் தொடர்ந்து வருகின்ற சோதனைகளால் இந்த உணர்வு ஓரளவு வந்து விடுகிறது. சில அமைச்சர்கள் பதவியிலிருந்து இறங்கிய பின் நிலையற்ற முறையில் இயலாதவர்களாக ஆங்காங்கே நடமாடுவதைக் காணலாம். சில வேளைகளில் 'நாங்கள் இப்படியெல்லாம் இருந்தோம். ஆனால் தற்போது இந்நிலையில் இருக்கிறோம்' எனக் கூறவும் செய்வர். மிகவும் கண்ணியத்திற்குரியவராக இருந்த ஒருவரை நான் ஸ்டேஷனில் சந்தித்தேன்; பேசினேன். எப்படி இருக்கிறீர்கள் எனக் கேட்டேன். அவர் சொன்னார்: என்ன கேட்கின்றீர்கள்? முன்னால் எல்லாம் மக்கள் தலைகுனிந்தவாறு சலாம் கூறுவார்கள். தற்போது வேலைக்காரன் கூட என்னைப் பார்த்தால் இவர் ஏதாவது வேலை சொல்லி விடக் கூடாது என்பதற்காக நழுவி விடுகிறார். ஆக, இவ்வுலக வாழ்க்கை உறுதியற்றது என்பதை பெரிய மக்கள் இவ்வுலகிலேயே உணர்ந்து கொள்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வின் முன்னால் தமது செயல்களை வழங்க வேண்டிய விஷயத்தில் இந்த உணர்வு

(தொடரும்...)

தமிழாக்கம்: மர்ஹூம் மவ்லவி முஹம்மது அய்யூப் சாஹிப்

நிலையற்ற தன்மை என்பது மனித வாழ்க்கையின் இரு பகுதிகளையும் குறிக்கும்.
உலக விஷயத்திலும் கூட மனிதன் எவ்வளவுதான் முயற்சி செய்து பொருள்களைத் தயாரித்த போதிலும் அல்லாஹ்வின் நாட்டமின்றி பயன் பெற முடியாது. உலகச் செல்வத்தின் பின்னால் பாய்ந்து செல்பவர் பிறரை ஏமாற்றியும் பல வகையிலும் ஏராளமான செல்வத்தைச் சேர்த்துக் கொண்டாலும் இறக்கும் தருவாயில் எல்லாவற்றையும் இழந்தவராக ஏங்கித் தவித்தவராக உலகை விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாக செய்திகளில் காணலாம். இன்றைய நாளேட்டிலும் அப்படிப்பட்டவர்களைப் பற்றிய செய்திகள் வந்துள்ளது. ஏறக்குறைய எல்லா மனிதனின் வாழ்க்கை அனுபவத்தையும் பார்த்தால் மனிதன் தனக்கு ஒளிமயமான எதிர்காலம் கிடைப்பதற்கும், அமைதி பெறுவதற்காக சேர்த்துக் கொள்ளும் பொருள்கள் பெரும்பாலும் அமைதியையும் இன்பத்தையும் தராமல் வீணாகி விடுகின்றன.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)

# எனது இலண்டன் பயணம்

மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

அல்லாஹ்வின் அருளால் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம் இலண்டனில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக ஆண்டு மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு ஜூலை மாதம் 25, 26, 27 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் யூ.கே.-வில் இந்த மாநாடு நடைபெற்றது. இது யூ.கே-வின் 59-ஆவது ஆண்டு மாநாடு ஆகும். 208 ஏக்கர் பரப்பரளவு கொண்ட 'ஹதீகத்துல் மஹ்தி' (மஹ்தியின் தோட்டம்) எனும் நமது ஜமாஅத் இடத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 46,061 பேர் கலந்து கொண்டனர்.

ஒவ்வோர் ஆண்டிலும் இந்தியாவிலிருந்து சில பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜமாஅத் செலவில் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ் - அல்லாஹ் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்களின் ஒப்புதலுடன் யூ.கே ஜல்ஸா சாலானாவுக்கு அனுப்பப்படும் நடைமுறை இந்தியாவில் இருக்கிறது. இந்த வகையில் இந்த ஆண்டு இந்த எளியவன் உட்பட 15 நபர்களுக்கு யு.கே ஜல்ஸாவிற்குச் செல்லும் நல்வாய்ப்பு கிடைத்தது. எங்களுக்கு ஒரு மாதம் வரை இலண்டனில் தங்கி பயன் பெறுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது அல்லாஹ்வின் அருளாகும்.

இலண்டன் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள ஹுஸூர் அவர்கள் அனுமதி வழங்கிய செய்தி மேலிடத்திலிருந்து எனக்கு தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கப்பட்டபோது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்தப் பயணம் தொடர்பாக ஏற்கெனவே யூ.கே ஜமாஅத் சார்பாக எங்களுக்குக் கிடைத்த அழைப்புக் கடிதம், இலண்டனில் தங்கியிருக்கும்போது அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வது ஆகிய ஆவணங்களுடன் விசா விண்ணப்பம் செய்தபோது 15 பேர்களுக்கும் விசா கிடைத்து விட்டது. எங்களுடன் நாஸிர் அஃலா மதிப்பிற்குரிய முஹம்மது இன்ஆம் கவ்ரி சாஹிப் அவர்களும் கலந்து கொண்டார்கள் என்பது கூடுதல் சிறப்பாகும். எங்கள் பயணக் குழுத் தலைவராக நாஸிர் பைத்துல் மால் ஆகிய மவ்லவி ரஃபீக் அஹ்மது பேக் சாஹிப் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

நாங்கள் ஜூலை 16-ஆம் தேதி தில்லியிலிருந்து Virgin Atlantic Air Ways மூலமாக நண்பகல் 11:15 மணிக்கு இலண்டன் புறப்பட்டு இலண்டன் நேரப்படி, மாலை 4:30 மணிக்கு சென்றடைந்தோம். எங்களை வரவேற்பதற்காக இலண்டனிலுள்ள தன்னார்வத் தொண்டர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். அவர்கள் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். வரவேற்க வந்தவர்கள் பெரிய பொறுப்பு வகிப்பவர்களாக இருந்தாலும் எங்களின் பயணப் பொருள்களை தாமே தூக்கிக் கொண்டனர். ஆனால் எங்களில் எவரும் அதற்கு அனுமதிக்காத நிலையில், எனது உடல் பலவீனத்தின் காரணமாக எனது பயணப் பொருள்களை தூக்கிக் கொண்டு வருவதற்கு பயணத் தலைவர் கூறியதால், எனது பயணப் பொருள்களை ஒருவர் தூக்கிக் கொண்டு வந்தார். ஆனால் அவர் மிகப் பெரிய பொறுப்பு வகிப்பவர் என்பது பின்னர் தெரிய வந்தது.




பிறகு பயணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து அதற்கேற்ப அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அதன்படி, நாஸிர் அஃலா சாஹிப், இன்னும் இரண்டு நாஸிர்மார்கள், நான், உ.பி -யில் பணியாற்றும் இன்னொரு மூத்த மவ்லவி சாஹிப், கேரளாவைச் சேர்ந்த (சங்கரன்கோவில்

ஜமாஅத்திலும், கோட்டார் ஜமாஅத்திலும் பணியாற்றிய) மவ்லவி ஷ.ீபீக் அஹ்மது சாஹிப், வங்காளத்தைச் சேர்ந்த ஒரு பொறுப்பு கொள்கை பரப்புநர் மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த ஒரு மவ்லவி சாஹிப் ஆகிய எட்டு பேரைக் கொண்ட ஒரு குழு சிராயே கதீஜா (கதீஜா விருந்தினர் இல்லம்) என்ற பெயரைக் கொண்ட இடத்தில் தங்குவதற்கான ஏற்பாடு செய்தனர். மற்றவர்கள் பைத்துல் ஃபுதூஹ் மஸ்ஜிதில் தங்க வைக்கப்பட்டனர். பைத்துல் ஃபுதூஹ் மஸ்ஜிது என்பது முபாரக் மஸ்ஜிதில் இருந்து பேருந்தில் ஒரு மணி நேர பயணத் தொலைவைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களும் பேருந்தில் காலை பத்து, பதினோரு மணிக்கு வந்து டில்போர்டிலுள்ள முபாரக் மஸ்ஜிது வந்து சேர்ந்தாலும் இரவு 9:30 மணிக்கு மக்ரிப், இஷா தொழுகைகளை தொழுத பிறகு பேருந்தில் புறப்பட்டு இரவு 11:00 மணியளவில் பைத்துல்



ஃபுதூஹ் மஸ்ஜிதுக்கு சென்றடைந்தனர். தொழுகைகளை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்குப் பின்னால் தொழ வேண்டும் என்ற ஆர்வமே அதற்குக் காரணமாகும்.

இதில் தங்க வைப்பதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் எட்டு நபர்களில் கொரோனா பரிசோதனையின்போது ஒருவருக்கு கொரோனா இருப்பதாக தெரிய வந்ததால், அவரை உடனே சிராயே கதீஜா (கதீஜா விருந்தினர் இல்லத்திலிருந்து) வெளியேற்றி ரகீம் பிரஸ் இருக்கும் கட்டடத்தில் தங்க வைத்தனர். அவர்கள் ஒரு வாரமாக தனியாக ஒரே அறையில் தங்க வைக்கப்பட்டு அவருக்கு அங்கேயே உணவுக்கான தேவையை நிறைவேற்றுவதற்காக ஒருவர் நியமிக்கப்பட்டார். அந்த ஒரு மவ்லவிக்கு மட்டும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திக்கும் வாய்ப்பு எங்களுடன் கிடைக்கவில்லை. குணமடைந்த பிறகுதான் அனுமதி கிடைத்து அவர் சந்தித்தார்.

அங்கு கொரோனா தொற்று நோய் இருந்த காரணத்தால், மஸ்ஜிதுக்குள் நுழையும் எல்லா அஹ்மதிகளும் மாஸ்க் அணிந்து செல்வது கட்டாயமாக்கப் -பட்டுள்ளது. முபாரக் மஸ்ஜிதின் நுழைவாயிலிலேயே Card Checking, பொருள்கள் Checking ஆகியவையெல்லாம் செய்து, மாஸ்க் அணிந்த பிறகுதான் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். மாஸ்க் கொண்டுவராதவர்களுக்கு நுழைவாயிலிலேயே மாஸ்க் வைத்துள்ளனர். அங்கிருந்து எடுத்து அணிந்து கொள்ள வேண்டும். அப்போது மறந்து விட்டாலும் கூட முபாரக் பள்ளிவாயிலில் நுழையும் இடத்திலும் மாஸ்க் வைக்கப்பட்டுள்ளது. அதை எடுத்து அணிந்து கொள்ள வேண்டும்.

சிராயே கதீஜாவிலிருந்து முபாரக் மஸ்ஜிது செல்வது நடந்து செல்லும் தொலைவுதான் என்றாலும், எங்களுக்காக ஐவேளைத் தொழுகைக்காகவும் கார் ஏற்பாடு செய்து எங்களை அழைத்துச் சென்றனர். ஓட்டுநரும் டியூட்டி கொடுக்கும் குத்தாம், அன்சார்களில் ஒருவராகத்தான் இருந்தார். குறித்த நேரத்திற்கு வந்து அழைத்துச் செல்கின்றனர். ஓட்டுநர் கிறித்தவத்திலிருந்து அஹ்மதியாக முன்னர் மாறியிருந்த புகழ்பெற்ற அறிஞர் 'பஷீர் அஹ்மது ஆர்சார்டு' அவர்களின் மகனாரும் ஓட்டுநர் டியூட்டியில் இருந்தார். இவர் நல்ல நகைச்சுவையாகப் பேசக் கூடியவராக இருந்தார். ஃபஜ்ர் தொழுகை அதிகாலை 4:30 மணிக்கு நடைபெற்றது. கார் 4:00 மணிக்கே வந்து விடுகிறது. அதற்கு முன்பே நாங்கள் காலைக் கடன்களை முடித்து, ஒளூ செய்து ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதால் அவ்வாறே ஆயத்தமாக இருந்தோம். இலண்டனில் பொதுவாகவே குறித்த நேரத்தில் வருவது, செல்வது ஆகிய நேரத்தை மிகச் சரியாகக் கடைபிடிக்கும் இந்தப் பண்பு அங்குள்ள எல்லா மக்களிடமும் கடைபிடிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க -தாகும்.

## இலண்டன் இஸ்லாமாபாத் என்ற இடத்திலுள்ள முபாரக் மஸ்ஜிது

ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹிம -ஹுல்லாஹ்) அவர்களின் காலத்தில் இலண்டன் மாநகரத்திற்கு வெளியே இந்த முபாரக் மஸ்ஜிதுக்காக தனியாக அதிக விலை மதிப்புடைய 25 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கப்பட்டது. அதில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதை மறுசீரமைத்து அலுவலகங்கள், தங்குமிடங்கள் கட்டப்பட்டன. இந்த நிலம் இலண்டன் மாநகரத்திலிருந்து ஒரு மணி நேர பயணத் தொலைவில் இருக்கிறது. இங்கு ஆண்டு மாநாடும் நடைபெற்று வந்தன. மேலும் கூடுதலாக 7 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. இவ்வாறு இது மொத்தம் 32 ஏக்கர் நிலமாகும். இங்கு ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் மண்ணறையும், அவர்களின் மனைவியின் மண்ணறையும் இருக்கிறது. ஃபஜ்ர் தொழுகையை நிறைவேற்றிய பிறகு மக்கள் இங்கு ஸியாரத் செய்வதற்காக வருகின்றனர். நாங்களும் நாள்தோறும் அங்கு சென்று அவர்களுக்காக துஆ செய்வது வந்தோம். முபாரக் மஸ்ஜிதுக்கு அருகில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இல்லமும், ஜமாஅத்தின் அலுவலகங்களும் இருக்கின்றன. வகீல் த.ஃலீமோ தன்.ஃபீஸ் மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் சாஹிப் அவர்களின் அலுவலகமும் இங்குதான் இருக்கிறது. இங்கும் அக்கம்பக்கத்தில் பல அஹ்மதி சகோதரர்கள் இடங்களை வாங்கி வீடுகளைக் கட்டியுள்ளனர்

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொழ வைக்கும் முறை

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையையும் நிறுத்தி, நிதானமாகத் தொழ வைக்கின்றார்கள். அமைதியாக ஓதித் தொழும் தொழுகைகளிலும், சத்தமாக ஓதித் தொழும் தொழுகைகளிலும் சூரா ∴பாத்திஹாவை ஓதத் தொடங்குவதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்கிறார்கள்.

ஹதீஸ்களிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், ஒரு நபித் தோழர் அறிவிக்கிறார்: நான் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! என் தாயும், தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். தக்பீருக்கும், கிராஅத்துக்கும் இடையில் தாங்கள் என்ன ஓதுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவை ஓதுகிறேன் என்று கூறினார்கள்:

اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِيْ وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ ۔ اَللّٰهُمَّ نَقِّنِيْ مِنْ خَطَايَايَ كَمَا يُنَقَّى
الثَّوْبُ الْاَبْيَضُ مِنَ الدَّنَسِ ۔ اَللّٰهُمَّ اغْسِلْنِيْ مِنْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

(அல்லாஹும்ம பாயிது பைனீ வ பைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல் மக்ரிபி. அல்லாஹும்ம நக்கினீ மினல் கதாயாய கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யழு மினத்தனஸி. அல்லாஹும்மக் ஸில்னீ மின் கதாயாய பில் மாயி வஸ்ஸல்ஜி வல் பரதி).

பொருள்: அல்லாஹ்வே! கிழக்கிற்கும், மேற்கிற்கும் நீ தொலைவை ஏற்படுத்தி இருப்பது போன்று, எனக்கும், என் பாவங்களுக்கும் இடையே நீ தொலைவை ஏற்படுத்துவாயாக. அல்லாஹ்வே! வெண்ணிற ஆடை அழுக்கிலிருந்து தூய்மையாக்கப்படுவதைப் போன்று, நீ என்னை என் பாவங்களிலிருந்து என்னைத் தூய்மையாக்குவாயாக. அல்லாஹ்வே! நீ என்னை பனியைக் கொண்டும் ஆலங்கட்டியைக் கொண்டும் நீராட்டுவாயாக. (புகாரி ஹதீஸ் எண்: 744 முஸ்லிம் ஹதீஸ் எண்: 598 காண்க).

இந்த அனைத்து துஆக்களையும் நபி (ஸல்) அவர்கள் தக்பீர் கட்டிய பிறகு ஓதுவார்கள். அவற்றிற்கு போதுமான நேரம் எடுத்துக் கொள்வார்கள். எனவேதான் சூரா ∴பாத்திஹாவை ஓதத் தொடங்குவதற்கு அதிக நேரம் ஆகும். இதைத்தான் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள், 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் நிறுத்தி நிதானமாகத் தொழ வைப்பார்கள். எதுவரையென்றால், அவர்கள் ஓதுவதை ஒருவர் எழுத விரும்பினால் எழுதி விடலாம். அந்த அளவுக்கு மெதுவாக ஓதுவார்கள்' என்று கூறினார்கள். (சான்று: அபூதாவூது ஹதீஸ் எண்: 4002 முஸ்னது அஹ்மது ஹதீஸ் எண்: 12643 காண்க).

இன்னொரு ஹதீஸில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தக்பீர் கட்டிய பிறகு 'அல்ஹம்து லில்லாஹி' என ஓதத் தொடங்குவதற்கும் இடையில் எவ்வளவு நேரம் இருக்கும் என்றால், சத்தமாக ஓதும் தொழுகைகளில் நபி (ஸல்) அவர்கள் சூரா ∴பாத்திஹாவை ஓத மறந்து விட்டார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு எழும் அளவுக்கு சூரா ∴பாத்திஹாவை ஓதத் தொடங்குவதற்கு அதிக நேரம் இருக்கும் என்று நபித் தோழர்கள் கூறியிருப்பதையும் நாம் படிக்கின்றோம். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சூரா ∴பாத்திஹாவை மிகத் தாமதப்படுத்தி ஓதுவது இந்த ஹதீஸுக்கு ஏற்றதாக இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.



இரண்டாவது விஷயம், மற்ற சூராவை ஓதி முடித்து விட்டாலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ருகூவில் அதிக நேரம் துஆ செய்கிறார்கள். இதிலிருந்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எவ்வளவு நிறுத்தி நிதானமாகத் தொழுகின்றார்கள் என்பதை கணிக்க முடிந்தது. சத்தமாக ஓதித் தொழ வைக்கும்போதும் ருகூவிலும், ருகூவில் இருந்து எழுந்து துஆ செய்யும்போதும், சஜ்தாவிலும், இரு சஜ்தாக்களுக்கு இடையிலான இருப்பிலும் அத்தஹிய்யாத்திலும் அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றார்கள்.

பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொழுகையை முடித்த பின்னரும் உடனே எழுந்து விடாமல் நீண்ட நேரம் அமர்ந்திருக்கிறார்கள். பிறகு எழுந்ததும் நீண்ட நேரம் நிற்கின்றார்கள். முதலில் அதற்கு என்ன காரணம் என்று புரியாமல் இருந்தது. அதற்குப் பிறகு அவர்கள் கைக்குட்டையால் கண்களைத் துடைப்பதை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தபோதுதான் தொழுகையில் கண்ணீர் மல்க துஆ கேட்டிருந்தார்கள் என்பதும், தொழுகை முடிந்ததும் கண்ணீரைத் துடைக்கிறார்கள்; அதனால் தான் எழுவதற்கு அதிக நேரமாகிறது என்பதும் தெரிய வந்தது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொழுகைக்கு, குறித்த நேரத்தில் வந்து விடுகிறார்கள். ஒரு சில நேரத்தில் மட்டும் ளுஹர் தொழுகையில் தாமதமாக வந்தார்கள். அதற்குக் காரணம், மக்களை சந்திக்கும் நிகழ்ச்சியில் அதிக நேரம் ஆனதால் அப்படி நடந்தது என்பதைத் தெரிந்து கொண்டோம். காலையிலிருந்து சந்திப்பதற்காகக் காத்திருந்தவர்களுக்கு சந்திப்பிற்கான நல்வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற அந்த பரிவுதான் அதற்குக் காரணம்.

மேலும் ஜல்ஸா நாள்களில் ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகள், மக்ரிப், இஷா தொழுகைகள் ஜம.்.் செய்து தொழப்படுகிறது.

### ஜுமுஆ குத்பாவும் ஜுமுஆ தொழுகையும்

நாங்கள் காதியானிலிருந்து சென்றதால் எங்களுக்கு ஜுலை 18-ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஹுஸூர் (அய்யத -ஹுல்லாஹ் - அல்லாஹ் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்களின் ஜுமுஆ குத்பாவை இலண்டன் முபாரக் மஸ்ஜிதில் எங்கள் வாழ்நாளில் முதன்முறையாக நேரடியாகப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களைப் பின்பற்றியவாறு ஜுமுஆ தொழுகை தொழுவதற்கும் உரிய தவ்.்.பீக் கிடைத்தது. நண்பகல் 1:00 மணிக்குத் தொடங்கும் ஜுமுஆவுக்காக நாங்கள் பகல் 11:30 மணிக்கு முபாரக் மஸ்ஜிதுக்குச் சென்றோம். அப்படியிருந்தும் அங்கு மிக நீண்ட வரிசையில் மக்கள் முபாரக் பள்ளிவாயிலில் நுழைவதற்காகக் காத்துக் கொண்டிருந்தனர். எப்போதும் ஜுமுஆவில் நான்காவது வரிசையில் பச்சை சட்டை, பச்சை Pant, பச்சை அணிவதை கட்டாயப் பழக்கமாகக் கொண்டிருக்கும் நபரை அஹ்மதிகள் பார்த்திருப்பர். அவர் காலை 10:00 மணிக்கு வரிசையில் முதலாவதாக வந்து நிற்பதால் மஸ்ஜிதுக்குள் 4-ஆவது வரிசையில் அமரும் வாய்ப்பு கிடைக்கிறது என்ற உண்மை பலருக்கும் தெரியாது. எனக்கும் அங்கு நேரில் சென்று பார்த்தபோதுதான் தெரிய வந்தது.

காதியான் பயணக் குழுத் தலைவர் நாஸிர் அ.்.லா சாஹிப் வரிசையில் நிற்கின்றார்கள். அவர்களை உள்ளே முதலில் அனுப்புங்கள் என்று டியூட்டியில் இருப்பவரிடம் கூறியபோது அவருக்கு அனுமதி கிடைத்து விட்டது. நானும் நாற்காலியில் அமர்ந்துதான் தொழ முடியும் என்பதால் நானும் நாஸிர் அ.்.லா சாஹிப் அவர்களுடனேயே உள்ளே சென்று விட்டேன். இலண்டனில் முதன்முறையாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாவை நேரடியாகப் பார்க்கின்ற, கேட்கின்ற தவ்.்.பீக் கிடைத்து جُمِعَ لَهُ الصَّلٰوةُ - அல்ஹம்து லில்லாஹ். முபாரக் மஜ்ஜிது நிரம்பி விட்டால், அருகிலுள்ள மஸ்ரூர் ஹாலில் அதிகமாக இடம் இருக்கிறது. அங்கு நாற்காலிக்கான வசதியும் இருக்கிறது. எனவே எனக்கு ஒரு ஜுமுஆ மட்டும்தான் முபாரக் மஸ்ஜிதில் அமர்ந்து ஜுமுஆ குத்பா கேட்பதற்கும் ஜுமுஆ தொழுகை தொழுவதற்கும் தவ்.்.பீக் கிடைத்தது. மற்ற ஜுமுஆக்களில் எனக்கு கெடுவாய்ப்பாக முபாரக் மஸ்ஜிதில் ஜுமுஆ தொழுவதற்கன தவ்.்.பீக் கிடைக்கவில்லை. அதனால் அதை ஒட்டியுள்ள ‘மஸ்ரூர் ஹாலில்’ மட்டுமே அமர்ந்து தொழ முடிந்தது.

### ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் சந்திப்பு

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை இரண்டு முறை சந்திப்பதற்கான தவ்.்.பீக் எங்களுக்குக் கிடைத்தது. முதல் சந்திப்பில் முறைப்படி சந்திப்பதற்கு அனுமதிக்கான விண்ணப்பம் கொடுத்தோம். அதன்படி, காதியானிலிருந்து சென்றிருந்த 15 பேரில் 7 பேர்களுக்கு முதலில் சந்திப்பதற்கும், அடுத்த நாளில் மற்ற 8 பேர்களுக்கு சந்திப்பதற்கும் வாய்ப்பு கிடைத்தது. சந்திப்புக்கு முன்னர் முறைப்படி கொரோனா பரிசோதனை செய்து கொரோனா தொற்று இல்லை என்ற முடிவு தெரிந்த பிறகுதான் டியூட்டியில் இருப்பவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திப்பதற்கு அனுமதி வழங்குகின்றனர். முதல் நாளில் சந்தித்தவர்கள் தங்களின் அனுபவங்களை எங்களிடம் கூறினார்கள். அவர்களில் பலர் ஹுஸூர் அவர்களுக்கு அன்பளிப்பு கொடுத்தனர். மேலும் சிலர் சில பொருள்களை தபர்ருக் செய்து தருவதற்காக (பரகத் எனும் இறையருள் கிடைப்பதற்காக) கொடுத்து தபர்ருக் வாங்கிக் கொண்டனர். நாஸிர் அ.்.லா மவ்லானா இனாம் கவ்ரி சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம், ஹுஸூர்! என் தலை முடியைத் தடவிக் கொடுங்கள் என்றார்கள். அப்படியா! சரி என்று ஹுஸூர் கூறியவாறு அவர்களின் தலை முடியைத் தடவிக் கொடுத்ததாக அவரே எங்களிடம் இந்த நிகழ்வைக் கூறினார்.



மறுநாள் எனக்கும் எஞ்சியுள்ள மற்ற சகோதரர்களும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திக்கும் தவ்.்.பீக் கிடைத்தது. எங்களுக்கும் கொரோனா பரிசோதனை செய்து யாருக்கும் கொரோனா நோய் இல்லை என்பதை உறுதி செய்த பிறகு சந்திக்க அனுமதி கிடைத்தது. சலாம் கூறிவாறு நாங்கள் அறையில் நுழைந்ததும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், ‘இன்று அதிகமான மக்கள் சந்திப்பிற்காக வந்துள்ளனர். எனவே சந்திப்பை சீக்கிரம் நடத்த வேண்டியது வரும்’ என்று முதலிலேயே கூறி விட்டார்கள். பிறகு ஒவ்வொருவரைப் பற்றியும் பெயர், செய்யும் பணி குறித்து விசாரித்தார்கள். நாங்கள் மாஸ்க் அணிந்து பேசும்போது மாஸ்கைக் கழற்றி விடுமாறு கூறினார்கள். மர்ஹூம் மவ்லவி அய்யூப் சாஹிப் அவர்களின் சொந்த தம்பி முஅல்லிம் ஸைனுல் ஆபிதீன் என்பவர் தன்னைப் பற்றிக் கூறும்போதே ஹுஸூர் அவர்கள் அவரிடம், நீங்கள் நேற்று முன்தினம் .்.பஜ்ர் தொழுகைக்குப் பிறகு நான் செல்லும்போது நின்றவர்தானே! என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்று கூறினார். ஹுஸூர் அவர்களின் நினைவுத் திறனை அறிந்து நாங்கள் வியப்பில் ஆழ்ந்து விட்டோம். பிறகு அவர் வெளியே வந்ததுமே ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேட்ட அந்த நிகழ்வை நினைத்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டார்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் என்னிடம், நீங்கள் என்ன பணி செய்கின்றீர்கள் எனக் கேட்டார்கள். அதற்கு நான், தமிழ் டெஸ்கில் தமிழ் மொழியாக்கம் செய்து வருகிறேன் என்று கூறினேன். இதைக் கேட்டதுமே ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், என்னிடம், தமிழா? அல்லது தாமிழா என்று கேட்டார்கள். அதற்கு நான் தமிழ் மொழியின் பலுக்கல் (உச்சரிப்பு) தமிழ் என்பதுதான். 'த' என்பது குறில்தான். ஆயினும் உருதுவில் அதை 'தாமிழ்' என நெடிலாக உச்சரிக்கின்றனர் என்று அரபி இலக்கணத்தின் அடிப்படையில் விளக்கிக் கூறினேன். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் புரிந்து கொண்டார்கள். அடுத்து காஷ்மீரைச் சேர்ந்த இன்னொரு மவ்லவி சாஹிப் அவர்களிடம், நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவர், ஹுஸூர்! நான் பணி நிறைவு செய்து விட்டேன் என்றார். அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பணி நிறைவு செய்து விட்டீர்கள் என்றால், பின்னர் யார் உங்களை அழைத்து வந்தார் என நகைச்சுவையாகக் கேட்டார்கள். அதற்கு அவர், ஹுஸூர்! எனக்கு Reemployment (மறுவேலை வாய்ப்பு) கிடைத்திருக்கிறது என்றார். அப்படியா? அப்போது அதைச் சொல்லுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நாங்கள் கொண்டு சென்ற அன்பளிப்பைக் கொடுத்தோம். நான் 'தபர்ருக்' செய்து தருவதற்காக (பரகத் எனும் இறையருள் கிடைப்பதற்காக கையால் தடவி துஆ செய்து தருவதற்காக) சில கைக்குட்டைகளை ஹுஸூர் அவர்களிடம் கொடுத்து அவர்கள் தமது கையால் தடவி துஆ செய்து தருமாறு கூறினேன். தபர்ருக் செய்து தர வேண்டுமா எனக் கேட்டு கையால் தடவிக் கொடுத்தார்கள். மேலும் ஒவ்வொருவரையும் தனியாக மேஜை அருகில் அழைத்து உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டு அதற்கேற்ப மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது என்ற பெயர் பொறிக்கப்பட்ட பேனாக்களை வழங்கினார்கள். என்னிடம் கேட்டபோது, எனக்கு இரு பிள்ளைகள் என்று நான் கூறியபோது, மூன்று பேனாக்களை வழங்கினார்கள்.

## வகீல் த.ஃமீலோ தன்.ஃபீஸ் மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் சாஹிப் அவர்களுடன் சந்திப்பு

நாங்கள் இலண்டன் சென்றடைந்த மறுநாளே வகீல் த.ஃமீலோ தன்.ஃபீஸ் மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் சாஹிப் அவர்களுடன் ஒரு கூட்டம் எங்களுடன் நடைபெற்றது. அதில் அவர்கள், நீங்கள் அனைவரும் On Duty-ல் இருக்கின்றீர்கள். எனவே எப்போது அழைத்தாலும் நீங்கள் வர வேண்டும் என்று அறிவுரை கூறியவாறு அங்குள்ள வை.ஃபை எண்ணையும் கொடுத்தார்கள். அதன்படி, எங்களில் யாருக்காவது ஒருவரை தனிப்பட்ட முறையில் விருந்துக்கு அழைத்தாலும் வகீல் த.ஃமீலோ தன்.ஃபீஸ் மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் சாஹிப் அவர்களிடம் அனுமதி பெற்றே சென்றனர். அடுத்து அன்றாடப் பணிகளைப் பற்றி அவர்களுக்கு குழுத் தலைவர் முறைப்படி, அன்றாடம் அறிக்கை கொடுத்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஹுஸூர் அவர்கள் எங்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய 20 பவுண்டு ரூபாயை மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் சாஹிப் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தவாறு இந்த 20 பவுண்டு என்பது இந்தியாவின் 20 ரூபாய் என்று நினைத்து விடாதீர்கள் என்றும் புன்னகைத்தவாறு கூறினார்கள். இந்திய மதிப்பின்படி, இது 20,000/- ரூபாய் ஆகும் என்பது வாசகர்கள் அறிந்ததே! பிறகு இரண்டு நாள்களுக்குப் பிறகு மேலும் 10 பவுண்டு கொடுக்கும்படி ஹுஸூர் அவர்கள் கூறினார்கள் என்று த.ஃமீலோ தன்.ஃபீஸ் சாஹிப் கூறியவாறு அதனை அனைவருக்கும் கொடுத்தார்கள். ஆக, எங்கள் ஒவ்வொருவருக்கும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 30 பவுண்டு அதாவது இந்திய மதிப்பின்படி, 30,000/- ரூபாய் அன்பளிப்பாக வழங்கினார்கள். جزاه الله تعالى أحسن الجزاء

ஜல்ஸாவைப் பொருத்தவரை இந்திய விருந்தினர்-களாகிய எங்களுக்கு Stage Pass கொடுத்தார்கள். ஆயினும் ஜல்ஸா திடலுக்குள் செல்வதற்கு முன்னர் நாங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோம் என்பது மட்டுமின்றி எங்களின் வாட்ச், பேனா, மொபைல் மற்றும் தொப்பி உள்ளிட்ட அனைத்து பொருள்களும் டிரேயில் வைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். மேலும் காதியானிலிருந்து சென்றிருந்த எங்கள் அனைவருக்கும் மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஸ்டேஜில் அமரக் கூடிய அனுமதியும் வழங்கப்பட்டது. ஆயினும் எனக்கும், நாஸிர் அ.ஃலா சாஹிப் அவர்களுக்கும் கெடுவாய்ப்பாக கீழே உட்கார முடியாததால் ஸ்டேஜில் அமரும் தவ்.ஃபீக் கிடைக்கவில்லை.



மாநாட்டு நிகழ்ச்சிகளை வாசகர்கள் காணொளி வாயிலாக முழுவதுமாகப் பார்த்தும், கேட்டும் இருக்கின்றீர்கள். எனவே அது பற்றி விரிவாகக் குறிப்பிட வேண்டிய-தில்லை. ஆயினும் ஒரு சில விஷயங்களை மட்டும் குறிப்பிடு-கிறேன். மாநாட்டுத் திடலில் அனைத்து நாடுகளின் கொடிகள் ஏற்றப்படும் வழக்கம் இருப்பதை வாசகர்கள் அறிவர். அந்த இடத்தில் நாங்கள் ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொண்டோம். மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் நாங்கள் நேரடியாக பைஅத் செய்த நிகழ்வுதான் குறிப்பிடத்தக்கதாகும். சில நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கையை நேரடியாகப் பிடிக்கும் நற்பேற்றைப் பெற்றிருந்தனர். அதன்படி, இந்திய நாட்டின் பிரமுகரும், எங்கள் குழுவின் தலைவருமாகிய மவ்லவி ர.ஃபீக் பேக் சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கையில் நேரடியாக தமது கையை வைப்பதற்கு தவ்.ஃபீக் கிடைத்தது. அவரைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து சென்ற அனைவரும் சங்கிலித் தொடராக ஒருவரது தோளில் இன்னொருவர் கை வைத்தவாறு பைஅத்தில் இணைந்து பைஅத் செய்தோம். பைஅத் வாசகங்களை ஹுஸூர் அவர்கள் கூறும்போது அவர்களே கண்ணீர் மல்க கூறுகிறார்கள் என்பதை தொலைக்காட்சி வாயிலாக நாம் அறிவோம். ஆனால் அதில் நேரில் பார்க்கக் கூடிய, நேரில் கலந்து கொள்ளக் கூடிய நல்வாய்ப்பு எனக்கு வாழ்க்கையில் முதன்முறையாகக் கிடைத்தது. அல்ஹம்து லில்லாஹ். பைஅத் நிகழ்வில்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் பைஅத் செய்யும்போது நாங்கள் அனைவருமே தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டோம். அந்த நிகழ்வை வார்த்தைகளில் வருணிக்க முடியாது. பைஅத்தை நேரடியாகச் செய்த எங்களுக்கும், முழு உலகிலும் இருக்கும் எல்லா அஹ்மதி முஸ்லிம்களுக்கும் அதன்படி செயல்படும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

## ஃபஸ்ல் மஸ்ஜிது

ஃபஸ்ல் மஸ்ஜிது எனும் இந்தப் பள்ளிவாயிலுக்கான அடிக்கல்லை 1925-ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நாட்டினார்கள். அதற்குப் பிறகு சில கட்டடங்கள் கட்டப்பட்டன. பிறகு அதற்கு அக்கம்பக்கத்தில் பல அஹ்மதிகள் வீடுகளை வாங்கினார்கள். ஃபஸ்ல் மஸ்ஜிது எனும் இந்தப் பள்ளிவாயிலில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி), மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்), நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்), மற்றும் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) ஆகிய நான்கு கலீஃபாக்கள் இமாமத் செய்து தொழ வைத்த பள்ளிவாயில் ஆகும் என்ற சிறப்பைக் கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் ஃபஸ்ல் மஸ்ஜிது செல்வதற்கான வாய்ப்பும் கிடைத்தது. அங்கு சென்றபோது ஃபஸ்ல் மஸ்ஜிதின் இமாம் அதாவுல் முஜீப் ராஷிது அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்து. நாங்கள் காதியானிலிருந்து வந்திருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்ததும் பள்ளிவாயிலில் எங்களை அமர வைத்து வரலாற்று சிறப்புமிக்க சில விஷயங்களைக் கூறினார்கள். அவர்கள் குறிப்பிடும்போது, முதலில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலத்தில் 1925-ஆம் ஆண்டு இந்த மஸ்ஜிது கட்டப்பட்டபோது, இங்கு வேறு எந்த இடமும் இருக்கவில்லை. இப்போதுதான் இந்த அளவுக்கு குடியிருப்புகள் தோன்றி விட்டன. ஆயினும் இந்தப் பள்ளிவாயில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கண்ட ஒரு ஆன்மிகக் கனவு மூலமாக நிறைவேறியது என்பதை நினைவுபடுத்தினார்கள். வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக நான் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைக் கீழே குறிப்பிடுகின்றேன்:

"நான் கண்டதாவது, நான் இலண்டன் நகரத்தில் ஒரு மேடையில் நிற்கின்றேன். மேலும் ஆங்கில மொழியில் நான் மிகவும் சான்றுகளுடன் கூடிய சொற்பொழிவால் இஸ்லாத்தின் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அதற்குப் பிறகு சின்னச் சின்ன மரங்களில் அமர்ந்திருந்த ஏராளமான பறவைகளைப் பிடித்தேன். அவற்றின் நிறம் வெண்மையாக இருந்தன. அநேகமாக அவற்றின் உடல் கவுதாரியைப் போன்றதாக இருந்தது. எனவே நான் இதற்குக் கொடுக்கும் விளக்கம் என்னவென்றால், நான் இல்லாவிட்டாலும் கூட எனது எழுத்துகள் அந்த மக்களிடம் பரவும். மேலும் நேர்மையான ஆங்கிலேயர்கள் பலர் உண்மைக்கு இரையாகி விடுவார்கள். உண்மையில், இன்று வரை மேற்கத்திய நாடுகளின் மார்க்கத் தொடர்பு உண்மையாளர்களுடன் மிகவும் குறைவாகவே இருந்திருக்கிறது. இறைவன் முழுவதுமாக ஆசிய நாடுகளுக்கு வழங்கி விட்டான். உலக அறிவை முழுவதுமாக ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றிற்கு வழங்கி விட்டான் என்பது போன்று இருந்தது. நபிமார்களின் தொடர் கூட தொடக்கத்திலிருந்து இறுதி வரை ஆசியாவின் பங்கிலேயே இருந்தது. மேலும் இறைநேசர்களின் மேன்மைகளும் இந்த மக்களுக்கே கிடைத்தன. இப்போது இறைவன் (ஐரோப்பாவில் உள்ள) இந்த மக்களுக்கு கருணையின் பார்வையை இட விரும்புகிறான்." (இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 377).

இன்னோரித்தில், ஆங்கிலேய மக்கள் இறுதியில் இஸ்லாத்தின் உண்மையை அறிந்து கொள்வார்கள் என்றும், இஸ்லாம் மார்க்கம் அந்த நாடுகளில் பரவி விடும் அந்தக் காலம் வந்து விட்டது என்றும் இஸாலயே அவ்ஹாம் எனும் நூலில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த அடிப்படையில் ஐரோப்பாவில் ஃபஸ்ல் மஸ்ஜிது கட்டப்பட்டது. அதற்கான செலவுகளை லஜ்னா இமாயில்லாஹ் எனும் பெண்களின் கிளை அமைப்பைச் சேர்ந்த பெண்களே ஏற்றுக் கொண்டனர்.

## பைத்துல் ஃபுதூஹ் மஸ்ஜிது

அடுத்து நாங்கள் ஐரோப்பாவிலேயே எல்லா பள்ளிவாயில்களையும் விட மிகப் பெரிய பள்ளிவாயிலாகத் திகழும் 'பைத்துல் ஃபுதூஹ் மஸ்ஜிது' சென்றோம். அது எங்கள் தங்குமிடத்திலிருந்து ஒரு மணி நேர பயணத் தொலைவில் இருக்கிறது. இந்த மஸ்ஜிது மற்றும் அதன் வளாகம் சேர்த்து மொத்தம் 5.2 ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. இந்த மஸ்ஜிதில் ஒரே நேரத்தில் 10,000 பேருக்கும் அதிகமானவர்கள் தொழ முடியும். மஸ்ஜிதுடன் மாநாட்டு மண்டபம், கல்வி மையம், நூலகம் விருந்தினர் இல்லம் ஆகியவை இருக்கின்றன. அவற்றின் முழுமையான விபரங்களை அங்கு டியூட்டியில் இருந்தவர்கள் எங்களுக்கு விளக்கிக் கூறியவாறு அறிமுகப்படுத்தி வைத்தனர்.

## யு.கே-விலுள்ள அஹ்மதிய்யாவின் ஜாமிஆ

யு.கே-விலுள்ள அஹ்மதிய்யாவின் ஜாமிஆவைப் பார்க்கும் நல்வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. இது 2005-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தெற்கு இலண்டன் பகுதிக்கு அருகில் இருக்கிறது. ஜாமிஆவின் வளாகம் புதுமையான வடிவில் இருக்கிறது. அங்கு வகுப்பறைகள், நூலகம், மாணவர்களுக்கான தங்குமிடம், விளையாட்டுத் திடல் ஆகியவை இருக்கின்றன. மாணவர்களுக்கு ஆன்மிகப் பயிற்சி கொடுப்பதற்காக ஜமாஅத்தான தொழுகைகள், திருக்குர்ஆன் ஓதுவது, தர்பிய்யத் தொடர்பான சொற்பொழிவு ஆகியவை நடத்தப்படுகின்றன.

## யு.கே-வில் சுற்றுலா

எங்களின் நிகழ்ச்சியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலின்படி, யூகே-விலுள்ள முக்கிய இடங்களுக்கு சுற்றுலா செல்வதற்கான அனுமதியும் கிடைத்தது. சுற்றுலாவில் இந்தியா, பாகிஸ்தான், வங்கப் பிரதேசம் கானா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல அஹ்மதிகள் கலந்து கொண்டனர். எங்களுக்காக Double Decker Bus (இரு தளப் பேருந்து)-க்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான்கு நாள்களைக் கொண்ட இந்த சுற்றுலாவில் பல அரிய இடங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*




திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் உண்மையை நிலைநாட்டக்கூடிய வாதங்கள்

பாகம் ஒன்று

## அறிவிப்பு

பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலில் விற்பனை விலை பற்றியும் மேலும் ஒரு முக்கியமான விஷயம் பற்றிய ஒரு சமர்ப்பிப்பு

பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலை வாங்க விரும்பும் கண்ணியமிக்க, மரியாதைக்குரியவர்களின் கனிவான கவனத்திற்கு நான் சமர்ப்பிப்பது யாதெனில், இந்நூல் 100 ஜுஸ்"க்களுக்கு (1 ஜுஸ்" என்பது 16 பக்கங்களைக் கொண்டது - பதிப்பாளர்) மேல் உள்ளடக்கி சற்று பெரிதாக இருக்கிறது. மேலும் அடிக்குறிப்புகளை அவ்வப்போது சேர்க்க வேண்டியது உள்ளதால் இந்நூல் முழுமையாக அச்சிடப்படும்போது அதன் அளவு மேலும் பெரிதாகி விடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் உயர்ந்த தரத்தினால் ஆன காகிதத்தில், அழகான எழுத்து வடிவில், சிறந்த நடை மற்றும் நேர்த்தியாக அச்சிடப்பட்டு வருகிறது. ஆகையால் இப்புத்தகத்தின் அசல் செலவு ஒரு தொகுதிக்கு மட்டும் ரூபாய் 25 ஆகக்கூடும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அனைத்து முஸ்லிம்-களுக்கும் இந்நூல் எளிதாக கிடைக்கும் வகையில் எவருக்கும் இந்நூலினை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படாத அளவில் அதன் விலை ரூபாய் 5 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தயாள எண்ணம் மற்றும் உறுதித்தன்மை உடைய வசதிவாய்ப்பு உள்ள முஸ்லிம்கள் முழு உள்ளத்துடன் மிகவும் முக்கியமான இந்நூலிற்கு ஆதரவு அளிப்பார்கள். அதை வைத்து செலவு வித்தியாசங்களை ஈடு செய்து விடலாம் என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் எப்படியோ எனது இந்த நம்பிக்கை இதுவரை நிறைவேறவில்லை. பெரும்பாலார் ஒன்று அல்லது இரண்டு பிரதிகளுக்கு மேல் வாங்கவில்லை. மாட்சிமை பொருந்திய பட்டியாலாவைச் சேர்ந்த ஹஸ்ரத் கலீபா சையது முஹம்மது ஹசன் கான் பகதூர் (Prime Minister and Member Council of Regency) அவர்களைத் தவிர, அன்னார் இந்நூலை வாங்க வசதி இல்லாத மாணவர்களுக்கு விநியோகம் செய்யும்படி இந்நூலின் 50 பிரதிகளை, அறிவிப்பில் வெளியிடப்பட்ட முழு தொகையையும் அளித்து வாங்கினார்கள். மேலும், அன்னார் இந்நூலை வாங்கக்கூடிய பிற நபர்களுக்கும் இதனை அறிமுகப்படுத்தி அவ்விதமாகவும் இன்னும் பல வழிகளிலும் உதவியாக இருந்தார்கள். இறைவன் அன்னாருக்கு நற்கூலியை வழங்குவானாக. மேலும் அன்னாருக்கு, அதிகமான நற்கொடைகளை வழங்குவானாக!

தற்போதைய சூழ்நிலை யாதெனில் ஏற்கனவே டிசம்பர் 3, 1879 அன்று அறிவித்திருந்தபடியே இந்நூலின் ஒரு பிரதியின் விலை ஐந்து ரூபாய்க்குப் பதிலாக பத்து ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அப்படியும்கூட தயாரிப்பு விலையில் இருந்து ஒன்றரை மடங்கு விலை தள்ளுபடி செய்யப்-பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பே பணம் செலுத்தி விட்டவர்களுக்கு புதிய விலை பற்றிய அறிவிப்பு பொருந்தாது என்பதை தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

எனது நூலை வாங்கி உள்ள, மிகுந்த கௌரவத்துடன், கீழ்கண்டவாறு நான் வெளியிட்டுள்ள பெயர்களைக் கொண்ட மதிப்பிற்குரியவர்களுக்கும் மற்றும் வசதியுள்ள கொடைத் தன்மை உடைய பிறருக்கும் இந்த அறிவிப்பின் மூலம் நான் முன் வைக்கும் கோரிக்கை யாதெனில் தாங்கள் இஸ்லாத்தின் மேன்மையை நிலைநாட்டும்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த உயரிய பணிக்காக ஆதரவு அளிக்க முன் வரும்போது அதன் நன்மைகள் தங்களுக்கு மட்டும் என்ற அளவில் அடங்காமல் மேலும் ஆயிரக்கணக்கான இறையடியார்-களுக்கும் இனி வருங்காலத்தில் சென்றடையும் என்பதே!

1. நவாப் ஷா ஜஹான் பேகம் (GCSI, CI, Ruler of Bhopal)
2. நவாப் அலாவுதீன் அஹ்மது கான் பஹதுர் (Ruler of Loharu)
3. மவ்லவி முஹம்மது சராக் அலி கான் (Assistant deputy to the Prime Minister of the State of Hydrabad, Deccan)
4. குலாம் காதிர் கான் (Minister of the state of Nalagarh, Punjab)
5. நவாப் முக்கராமுத் தவ்லா பஹதூர் (Hyderabad)
6. நவாப் நசீருத் தவ்லா பஹ்தூர் (Bhopal)
7. நாவாப் சுல்தானுத் தவ்லா பஹ்தூர் (Bhopal)

8. நவாப் அலி முஹம்மது கான் பஹ்தூர் (Ludhiana Panjab)
9. நவாப் குலாம் மஹ்பூப் சுப்ஹானி கான் பஹ்தூர் (Raise E Azam, Lahore)
10. சர்தார் குலாம் முஹம்மது கான் (Rais, Wah)
11. மிர்ஸா சயீதுத்தின் அஹ்மத் கான் பஹ்தூர் (Extra Assistant Commissioner, Ferozepur)

மறுமையின் பேரின்பத்தை மக்கள் அடையும் படியாக, உரிய உதவிகளைச் செய்யும் தொண்டிற்கு, தனது சக்தியை செலவு செய்வதைத் தவிர ஒரு மனிதனுக்கு மிகப் பொருத்தமான வேறு பணிகள் இல்லை என்று தூய நபிகள் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து கண்ணியத்திற்குரியவர்-களும் இந்த கோரிக்கைக்கு பதில் அளிக்கும் பட்சத்தில் அதிகமாக பணம் தேவைப்படக் கூடிய, பல கஷ்டங்களை உள்ளடக்கிய இப்பணியை, எளிதில் நிறைவேற்ற முடியும்.

அதிமுக்கியம் வாய்ந்த இம்முயற்சியினை வீணாகப் போகும் நிலையில் இறைவன் விட்டு விடமாட்டான் என்பதே என் பிரார்த்தனையாகவும் நம்பிக்கையாகவும் உள்ளது. கடந்த காலங்களில் நமது மார்க்கத்தின் மிகப் பெரிய நோக்கங்கள் வியக்கத்தக்க வகையில் நிறைவேறப்-பட்டுள்ளன. அதுபோல இன்றும் கூட மறைவான இடத்தில் இருந்து ஒருவர் உதவிட முன்வருவார் என்று நான் நம்புகிறேன்.

ஆகச்சிறந்த நண்பனாகவும் ஆகச்சிறந்த உதவி-யாளனுமாகிய அல்லாஹ்வையே நாம் சார்ந்துள்ளோம்.

ஆசிரியரின் அறிவிப்பு
மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி
தலைவர்
காதியான் குருதாஸ்பூர் மாவட்டம்
பஞ்சாப்

## வருத்தம் தெரிவித்தல்

இந்நூலின் முதற்பாதி தற்போது வெளியிடப்-பட்டிருக்க வேண்டும். ஆனால், ஏழு எட்டு மாதங்களாக, ஏற்பட்டிருந்த உடல் நலக்குறைவின் நிமித்தமும் இந்நூல் அச்சடிக்கப்பட்டு வரும், ‘ச.ஃபரே ஹிந்த் அச்சகம், அமிர்தசரஸ், பஞ்சாப் மாநிலம்’ எனும் அச்சகத்தின் உரிமையாளர் சந்தித்த எதிர்பாரத சிக்கல்களின் நிமித்தமும் தாமதமாகி விட்டது. இறைவனின் நாட்டம் இருப்பின் இனி அப்படியான தாமதங்கள் எதிர்காலத்தில் ஏற்படாது.

## ஆசிரியரின் ஓர் அவசர கோரிக்கை

அகிலங்களின் இறைவனுக்கு நான் எவ்வாறு எனது நன்றியை அறிவிப்பேன். அவனே முதலில் இந்த எளியவனுக்கு அவனது உதவியைக் கொண்டும், கிருபையைக் கொண்டும், மறைவான தெய்விக ஆதரவைக் கொண்டும், இந்த நூலினை எழுதவும் தொகுக்கவும் சாத்தியமாக்கினான்.

அதன் பின்பு, அவனே இதனை முஸ்லிம் பெரியவர்கள், மூத்தவர்கள், சான்றோர்கள் மற்றும் இஸ்லாமிய சகோதரர்கள் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டு சேர்த்தான். மேலும், இறைவனே, அவர்களிடத்தில், இந்நூலினை அச்சடித்து வெளியிட்டு பிரபலப்படுத்த வேண்டும் என்ற ஆவலை அவர்களிடத்தில் விதைத்தான்.

எனது மார்க்கம் சார்ந்த நோக்கங்கள் மற்றும் முயற்சிகள் வீணாகிப்போய் விடாதபடி தங்களின் பரந்த கொடைத்தன்மையின் நிமித்தம் எனக்கு உதவி செய்த அனைவருக்கும் எனது நன்றியை நிச்சயமாக நான் தெரிவிக்க வேண்டும். அவர்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லாத நிலையில் நான் அவர்களுக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

அவர்களில் பலர் அவர்களால் முடிந்தவரை இந்த சிறந்த பணிக்காக உதவி நல்கி உள்ளதையும் மேலும் சிலர் இன்னும் கூடுதலாக பங்களிப்பதாக வாக்களித்துள்ளதையும் காணும்போது என் உள்ளத்தில் அவர்களின் பால் நன்றி உணர்வு இன்னும் ஆழமாக செல்கின்றது.

இந்த குறிப்பின் இறுதியில், இந்நூலின் பிரதிகளை வாங்கியவர்கள் அல்லது இந்நூல் வெளியிடப்படுவதற்கு உதவிய வள்ளல்கள் மற்றும் அர்ப்பணம் மிக்க நல்லோர்களின் கண்ணியமிக்க பெயர்களை பதிந்துள்ளேன். இந்த புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு முடியும்வரை உதவி செய்பவர்களுக்கு இப்புத்தகத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொண்டு இருப்பேன். எதுவரை, இந்நூல், உலகிற்கு நன்மையின் பிறப்பிடமாக இருக்குமோ, இதனின்று பயன் பெறுபவர்கள், இதனை வாசிப்பதில் ஒரு சுகமான நேரத்தை செலவு செய்பவர்கள் என்னையும் எனக்கு உதவி செய்தவர்களையும் இறைவனிடத்திலான உங்கள் பிரார்த்தனைகளின்போது நினைவில் கொள்ளுங்கள்.

இவ்விடத்தில் ஒரு சிறப்பான குறிப்பை நான் கூற வேண்டிய தேவை இருப்பதாக நினைக்கும் ஓர் உண்மையான விஷயமாவது, இது வரையில், மிக அவசியமான இப்பணியின் வளர்ச்சிக்கு எல்லாரையும் விட மிகப் பெரிய உதவிகளை செய்து வருபவர் ஹஸ்ரத் கலீ.ஃபா செய்யிது முஹம்மது ஹசன் கான் பகதூர் (தஸ்தூரெ முஅஸ்ஸம்)-ஐ பிரதமர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர், பாட்டியலா மாகாணம்.

இந்தக் கண்ணியத்திற்குரியவர்கள், அவர்களது அதீத வள்ளல் தன்மையின்படி, ஈமானின்பாலுள்ள அன்னாரின் நேசத்தின் அடிப்படையில், இப்புத்தகத்தை வாங்குவதற்காக ரூபாய் 325 வழங்கினார்கள். தன் சொந்த பணத்திலிருந்து ரூபாய் 250ம் மீதம் ரூபாய் 75 தனது அலுவலக நண்பர்களின் பங்காகவும் இருந்தது. மேன்மையான, குணசாலியான, மாட்சிமை பொருந்திய பிரதம மந்திரி தனது கருணைமிகு கடிதத்தில் இப்புத்தகப் பணி நிறைவடையும் வரைக்கும் மேற்கொண்டு பொருள் உதவி அளிப்பதாகவும் மேலும் வாங்கக்கூடிய சிலருக்கு இந்நூலை அறிமுகம் செய்வதாகவும் வாக்களித்துள்ளார்கள். இது போலவே ஹஸ்ரத் .ஃபக்ருத் தவ்லா, நவாப் மிர்சா முஹம்மத் அலாவுதீன் அஹ்மத் கான் பஹ்தூர், லோஹாரு மாகாணத்தின் ஆட்சியாளர் ரூபாய் 40 அளித்திருந்தார்கள். அதில் ரூபாய் 20 அன்பளிப்பாக இருந்தது. மேலும் எதிர்காலத்தில் உதவியும் ஆதரவும் அளிக்க இருப்பதாக வாக்களித்துள்ளார்கள்.

போபாலின் ஆட்சியாளர் நவாப் ஷாஜஹான் பேகம் (Member of the Imperial Order of the crown of India (CI), knight grand commander in the Most Exalted order of the Star of India (GCSI), (அன்னாரது செழிப்பு தொடர்ந்திருப்பதாக) அவர்களது ஆழ்ந்த ஈடுபாட்டிற்கும் எனது முழுமையான நன்றி உரித்தாகுக. மனித குலத்தின் மீது அன்பும், கருணையும், மிக உயர்ந்த குணநலன்களையும் கொண்டவர்களாகிய அவர்களும் இந்நூலின் பிரதிகளை வாங்குவதாக உறுதியளித்துள்ளார்கள். காத்தமுல் அன்பியா - நபிமார்களின் முத்திரை (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மை மற்றும் மேன்மையினை வெளிக்கொண்டு வருவற்கும், இஸ்லாம் மார்க்கம் இறைவன் புறத்திலிருந்து அருளப்பட்டது என்பதற்குரிய சான்றுகளைப் பகல் வெளிச்சம் போல எடுத்து வைப்பதற்கும், மனித குலத்திற்கு அளவற்ற நன்மை பயக்கக் கூடியதாகவும் இருக்கின்ற இந்த உன்னத பணியின் பக்கம் மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் ஒருமுகப்படுத்திய கவனத்தை அளிப்பார்கள் என நான் பெரிதும் நம்புகின்றேன்.




இவ்விடத்தில், இந்நூலைப் பற்றி இதுவரை அறிந்திடாத ஏனைய முஸ்லிம் கண்ணியத்திற்குரியவர்களுக்கும் பெரியோர் -களுக்கும் நான் கோரிக்கை வைப்பது யாதெனில், அவர்கள் இந்நூலின் வெளியீடு சம்பந்தமாக சிறிதளவேனும் உதவி அளிப்பார்களெனில் அவ்வுதவி இந்நூலை வெளியிடும் பணியிலும் இந்நூலானது பொதுவாக கிடைக்கக்கூடிய வகையிலும் அமைவதற்கு பேருதவியாக இருக்கும். இதுவே எனது உள்ளத்தின் ஆழத்தில் உள்ள உண்மையான அவா ஆகும்.

உலகத்தின் பெரியோர்களே! இஸ்லாத்தின் கலங்கரை விளக்கங்களே! தாங்கள் நிச்சயமாக அறிவீர்கள். இன்றைய காலகட்டங்களில், இஸ்லாம், இறைவன் புறமிருந்து தோன்றியுள்ள மார்க்கம் என்பதற்கான சான்றுகளைப் பரப்புவது என்பது தவிர்க்க முடியாத முக்கியத்துவம் பெற்றுள்ளது. மேலும் நமது குழந்தைகள் மற்றும் குடும்பத்தாருக்கு இஸ்லாத்தின் உண்மையின் சான்றுகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது எந்த அளவிற்கு ஒரு கடமையாகவும் வெளிப்படையான ஒரு தேவையாகவும் ஆகி விட்டது எனில் அதனை வலியுறுத்த வேண்டியதில்லை. இக்காலகட்டத்தில், இறை நம்பிக்கையானது எவ்வளவு தூரம் சிதைக்கப்பட்டு உருமாறிபோய் இருக்கின்றது என்பதையும், மனிதர்கள் எவ்வளவு தூரம் நேர்மையற்றுள்ளார்கள் என்பதையும், மாறுபாடுள்ள சிந்தனை உள்ளவர்களாகவும் ஆகி விட்டனர் என்பதையும் குறித்து யாரும் அறியாமல் இருக்க முடியாது. பல்வேறு வகையான வழிகேடுகள் சிந்தனைகள் செல்ல தொடங்கி விட்டன. தீமையின் காற்று வீசுகின்றது. களங்கம் எனும் காரிருள் மற்றும் தவறான நம்பிக்கைகள் இப்பூமியைச் சூழ்ந்துள்ளன. இத்தகு, மிகப் பெரிய மரங்களையே சாய்க்கக்கூடிய, புயல் காற்றினை அறிந்த ஒவ்வொருவரும் எந்த ஒரு அவசரத் தேவையுமே இல்லாத நிலையில் இந்நூல் எழுதப்படவில்லை என்று உணர்ந்திருக்கக் கூடும்.

தவறான நம்பிக்கைகள் மற்றும் சீர்கேடான யோசனைகள் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு வகைகளில் வெளிப்படுகின்றன. இவற்றை எதிர்க்கும் வண்ணம் தவறான விமர்சகர்களை ஆக்ரோஷமாக எதிர்ப்பதற்கும் இறைவேதத்தின் ஒளியில் விமர்சகர்களை வாயடைத்துப் போகச் செய்து மறுக்க முடியாத ஆதாரங்களினால் அவர்களை முறியடிக்கவும் இறைவன் தனது கிருபையினால் பல நூல்கள் எழுதப்படச் செய்கின்றான். இம்முறைப்படியே இஸ்லாம் எனும் மரம் எப்பொழுதும் பசுமையாகவும் பொலிவுடனும் செழிப்புடனும் நிற்கின்றது.

கண்ணியத்திற்குரிய இஸ்லாமிய பெரியோர்களே! தங்களுடைய கல்வி அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில், இக்காலத்தின் தீமைகளையும் உண்மை -யிலேயே வேதனை அளிக்கும் அதன் கூறுகளையும் தாங்கள் அறியாமல் இருக்க மாட்டீர்கள். மேலும் மக்களின் உள்ளங்களில் வேரூன்றிப்போய் உள்ள சீர்கேடுகளின் அனைத்து ரூபங்களையும் அல்லது தீய அறிவுரைகள் சோதனைகள் மற்றும் தவறான வழிநடத்துதலின் நிமித்தம் எவ்வாறு அவர்கள் வழிகெடுக்கப்படுகிறார்கள் என்பதையும் தாங்கள் அறியாமல் இருக்க முடியாது. இவை அனைத்துமே இஸ்லாம் இறைவன் புறத்திலிருந்து தோன்றி உள்ளது என்பதனை உரிய வாதங்களின் வாயிலாக மக்கள் அறியாது இருப்பதாலேயே ஆகும். கற்றறிந்த ஒரு சிலரும் கூட மார்க்கக் கல்வி போதிக்கப்படாத பள்ளிகளிலோ, கல்வி ஸ்தாபனங்களிலோ இருந்து அவர்களின் அறிவைப் பெற்றுள்ளனர். இதன் விளைவாக சிந்தனைத்திறன், யோசித்தல் மற்றும் தியானம் போன்றவை சிறப்பாக பயன்படும் அவர்களின் வாழ்வின் முக்கிய காலகட்டம், கலை மற்றும் அறிவியல் அறிவைப் பெறும் முயற்சியிலேயே கழிந்து விடுவதால் மார்க்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அறியாதவர்களாய் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு, இஸ்லாம் இறைவன் புறத்திலிருந்து தோன்றிய மார்க்கம் என்பதற்கான ஆதாரங்களை, காலம் தாழ்த்தாமல் உடனடியாக அறிவிக்கப்படவில்லை எனில் பௌதிக உலகத்தின் நாட்டத்திலேயே உழலும் படைப்பினங்களாகவோ அல்லது ஈமான் பற்றிய எந்த அக்கறையும் இன்றி இறைவனை மறுப்பவர்களாகவோ இவர்களின் நிலை இருந்து விடக்கூடும். இது வெறும் அனுமானம் அல்ல. இஸ்லாத்தின் போதனைகளை அறியாத காரணத்தினாலேயே கண்ணியமிக்க குடும்பங்களின் வாரிசுகள் கூட ஞானஸ்தானம் செய்யப்பட்டு கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் சம்பவங்களை நானே நேரில் கண்டுள்ளேன். தனது அளப்பெரிய கிருபையினால் இறைவன் இஸ்லாத்திற்கு உதவி

செய்யாமலும், பல முஸ்லிம் அறிஞர்களின் தாக்கமிக்க போதனைகள் மற்றும் எழுத்துக்களைக் கொண்டும் உண்மையான மார்க்கத்தை இறைவன் பாதுகாக்காமலும் இருந்திருந்தால் நமது தூய நபி (ஸல்) அவர்கள் எந்த நாட்டில் பிறந்தார்கள் என்பதைக் கூட மக்கள் மறந்திருக்ககூடும். இந்நிலை கொந்தளிப்பான வக்கிர மற்றும் சீர்கேடு நிறைந்த இக்காலகட்டத்தில் குறிப்பாக தென்படுகின்றது. நிராகரிப்பாளர்களிடமும், இறைமறுப்பாளர்களிடமும் மிகுந்த வீரத்துடனும் உத்வேகத்துடனும் விவாதம் செய்யும் மார்க்கப் பணியை முஸ்லிம் ஆலிம்கள் கை விட்டு இருந்தால் அனைத்து இஸ்லாமிய விழுமியங்களும் சீக்கிரமே கரைந்து போயிருக்கும். பாரம்பரிய இஸ்லாமிய வாழ்த்துச் செய்தியான 'அஸ்ஸலாமு




அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு' என்பது விரைவில் மறைந்துபோய் 'குட்பை', 'குட்மார்னிங்' என்பவற்றையே கேட்க முடியும். எனவே உற்சாகத்துடனும் உண்மையுடனும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இஸ்லாம் இறைவன் புறமிருந்து வந்துள்ள மார்க்கம் என்பதை பரப்ப முற்படுவது ஒருவர் தனது குழந்தைகளிடமும் வாரிசுகளிடமும் காட்டும் கருணையாகும். ஏனெனில் கொடுமையான தொற்றுநோயின் காலத்தில் வீசும் விஷக் காற்றுக்கு எவரும் பாதுகாக்கப்பட்டவர்களாக இல்லை.

இந்நூலைப் பற்றி சந்தேகங் கொண்டு சிலர் இவ்வாறு வினவலாம். "விமர்சகர்களை அமைதிப்படுத்த, அவர்களுக்கு மறுப்பு தெரிவிக்க ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள மார்க்க நூல்கள் போதுமானதாக இல்லையா? நமக்கு மேலும் ஒரு நூலின் தேவை என்ன?" என்று கேட்கலாம். நான் தெளிவுபடுத்த விரும்புவது யாதெனில், விளைவை வெளிப்படுத்தும் விஷயத்தில் இந்நூல் பிற நூல்களைப் போன்று அல்ல. ஏற்கனவே இருக்கக்கூடிய பிற நூல்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மார்க்கப் பின்னணியில் அந்த மார்க்கத்தின் குறிப்பிட்ட நம்பிக்கைகளை மறுக்கும் படியாகவே அமைந்துள்ளன. அந்த நூல்கள் எவ்வளவுதான் சிறப்பு வாய்ந்ததாக இருப்பினும் அவை அனைத்தும் எந்த ஒரு குறிப்பிட்ட ஒரு மார்க்கத்திற்காக எழுதப்பட்டதோ அந்த மக்களுக்கு மட்டுமே பயன்படும் வகையில் அமைந்துள்ளன. ஆனால் இந்த நூலானது இஸ்லாம் இறைவனிடத்தில் இருந்து அருளப்பட்டது என்பதை நிரூபிக்கின்றது. மேலும் அனைத்து மார்க்கங்களின் போதனைகளை விட சிறப்பான போதனைகளை இஸ்லாம் கொண்டுள்ளது என்றும், திருக்குர்ஆனின் அதிகாரப்பூர்வமான உண்மைத்தன்மையை அறிவார்த்தமாக விரிவான கேள்விகளுடன் நிலைநாட்டுகின்றது. இவ்வகையில் வெளிப்படும் உண்மைகளை ஒரு குறிப்பிட்ட விஷயத்தின்பால் நடத்தப்படக்கூடிய விவாதங்களின் மூலம் அறிந்து கொள்ள இயலாது என்பது தெளிவான விஷயமாகும். ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தை சார்ந்துள்ள மக்களிடம் விவாதம் செய்யும்போது ஏற்கனவே அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை பற்றிய ஆழமான மற்றும் உறுதியான வாதங்களை வைக்க வேண்டிய தேவை இல்லாமல் போய் விடுகின்றது. மாறாக ஒருவர் முன் வைக்கும் குற்றச்சாட்டிற்கு பதில் அளிப்பதையே முதன்மையாக கொள்ளப்படுகிறது. மேலும் அவ்வாறான விவாதங்கள் தர்க்கம் மற்றும் காரண காரிய விஷயங்களின்பால் மிகக் குறைவாகவே சார்ந்து இருக்கும். அடிப்படையிலேயே இவ்விவாதங்களில் தத்துவார்த்த ரீதியிலான தேடல்களின் அவசியம் இருக்காது. விரிவான கேள்விகளோ இருப்பதே இல்லை. அறிவுப்பூர்வமான வாதங்கள் என்பவை சிறிய அளவிலேயே இருக்கும். உதாரணமாக, ஏற்கனவே இறைஇருப்பு, இறை வெளிப்பாடு மற்றும் இறைவனின் படைப்பாற்றல் ஆகியவற்றில் நம்பிக்கை உள்ள ஒருவரிடம் நாம் விவாதம் புரியும் பட்சத்தில் அவரிடம் இறைஇருப்பு, இறைவெளிப்பாட்டின் தேவை மற்றும் இறைவனுடைய படைக்கும் ஆற்றல் போன்றவற்றைக் குறித்து அறிவுபூர்வமான வாதங்களை முன் வைக்க வேண்டிய தேவை இல்லை. உண்மையில், சவாலாக வைக்கப்படாத ஒரு கருத்தைக் குறித்து ஒரு விவாதத்தை ஆரம்பம் செய்வது அர்த்தமற்றதாகிறது. இருந்தபோதிலும், ஒருவர் பல்வேறு கோட்பாடுகள், நம்பிக்கைகள், சந்தேகங்கள், மற்றும் ஐயங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளும்போது எந்த ஒரு விஷயத்தையும் விட்டுவிட முடியாது.

அதுபோல, ஒரு குறிப்பிட்ட மார்க்கத்திற்கு மறுப்பு தெரிவிக்கும்படி வைக்கப்படும் வாதம் பொதுப்படையாக பிறிதொரு மார்க்கத்திற்கும் பொருந்தாது. உதாரணத்திற்கு, நபிமார்களின் முத்திரையான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு சான்றாக பைபிளில் கூறப்பட்டுள்ள முன்னறிவிப்புகளை நாம் எடுத்துரைக்கும்போது கிறிஸ்தவர்களையோ யூதர்களையோ நாம் ஏற்றுக் கொள்ள வைக்க முடியும். ஆயினும் ஒரு இந்து அல்லது ஒரு ஜூராஷ்டிரர் அல்லது ஒரு தத்துவஞானி அல்லது ஒரு பிரம்மசமாஜத்தைச் சார்ந்தவர், தனக்கு நம்பிக்கை இல்லாத ஒரு நூலில் இருந்து கூறப்படும் ஆதாரங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பார். அவர், தான் ஏற்றுக் கொள்ளாத நூல்களிலிருந்து வைக்கப்படும் வாதங்களில் தனக்கு ஏற்புடைமையில்லை என பதில் அளிப்பார். அவ்வாறே இந்து மத வேதங்களில் இருந்து நாம் முன் வைக்கும் எந்த ஒரு சிறந்த விஷயத்திற்கும் ஒரு கிறிஸ்தவரின் பதிலும் அதே மாதிரியாகத்தான் இருக்கும்.

இக்காரணங்களின் அடிப்படையிலேயே, இஸ்லாம் உண்மை மார்க்கம் என்றும் இறைவன் புறமிருந்து தோன்றியுள்ளது என்றும் எல்லா மார்க்கத்தினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் அறிவுப்பூர்வமான வாதங்களுடன் விளக்கிக் காட்டக்கூடிய ஒரு நூல் அவசரத் தேவையாக இருக்கின்றது. அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி எவருக்கும்இல்லை. எல்லாப் புகழும் இறைவனுக்கே! இந்த நூல் இவ்வனைத்து தேவைகளையும் நிறைவேற்றக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் இரண்டாவது சிறப்புத்தன்மை யாதெனில் இஸ்லாத்தின் எதிரிகள் வைக்கக்கூடிய அடிப்படையற்ற ஆட்சேபனைகளை மறுப்பதற்கும் அவர்களுக்கு எதிரான நமது வாதத்தை முழுமை செய்வதற்கும் ஒரு வலுவான வழிமுறையை இது தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது, ரூபாய் பத்தாயிரம் பரிசுத் தொகை வழங்கக் கூடிய வகையில் எதிரிகளுக்கு ஒரு சவாலையும் இந்நூல் உள்ளடக்கி உள்ளது. அந்த வகையில் அவர்களுக்கு எந்த ஒரு சாக்குபோக்கும் கூற இயலாது. இவ்வாறு கியாம நாள் வரை இறக்கி வைக்க இயலாத ஒரு பெரிய பாரத்தை அவர்கள் மீது இது வைக்கிறது. தங்களுக்கு தாங்களே எதிராக இருக்கும் அவர்களின் வாழ்க்கையில் அவர்களுக்கு மட்டுமே புரியக் கூடியதான ஒரு கசப்புத்தன்மையை இந்த பாரம் அவர்களிடம் உருவாக்கி உள்ளது.



சுருங்கக்கூறின், இந்நூல் மிகவும் தேவையானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறது. உண்மையைத் தேடுபவருக்கு நிச்சயமாக அதிக பயனளிப்பதாக இந்நூல் இருக்கும். இறைவன் புறமிருந்து அருளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் எனும் உண்மையை சூரியனைப் போல தெளிவாக்கி உள்ளது. மேலும் இஸ்லாத்தின் கவுரவம், மேன்மை மற்றும் உண்மை எதைச் சார்ந்துள்ளதோ அந்த தூய வேதத்தின் உயர்வு மற்றும் மகத்துவத்தை வெளிக் கொணர்ந்து உள்ளது.

மார்க்கத்தின்பால் உள்ள நேசத்தினால் உந்தப்பட்டு, 'பராஹீனேஅஹ்மதிய்யா' எனும் நூலின் பதிப்பிற்காகவோ, அல்லது இந்நூலின் பல பிரதிகளை வாங்கியோ உதவிய கண்ணியத்திற்குரியவர்களின் பட்டியல் கீழே கொடுக்கப் -பட்டுள்ளது.

| எண் | நூலின் பிரதிகளை விலை கொடுத்து வாங்கியவர்கள் அல்லது நன்கொடை வழங்கியவர்களின் பெயர் | தொகை | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | கலீ.ஃபா செய்யத் முஹம்மத் ஹஸன்கான் பஹதூர் தஸ்துரே முஅஸ்ஸம் பட்டியாலா மாகாணத்தின் பிரதமர் மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர் | மொத்தம் ரூ. 325/- தனிப்பட்ட பங்கு ரூ. 250/- பிற நண்பர்களின் பங்கு ரூ.325/- | நூல் வாங்கு -வதற்காக |
| மேற்குறிப்பிட்ட கனவானின் அலுவலகங்கள் வாயிலாக வழங்கியவர்கள் | | | |
| | *i)* மவ்லவி .ஃபஸ்ல் ஹக்கீம் | ரூ. 5/- | நூல் வாங்கு வதற்காக |
| | *ii)* குதா .ஃபக்ஸ் கான், மாஸ்டர் | ரூ. 5/- | ” |
| | *iii)* செய்யத் முஹம்மத் அலி, ஆ.ஃபிஸ் இன்சார்ஜ், கன்டொன்மென்ட் கன்ஸ்ட்ரக்ஷன் | ரூ. 5/- | ” |
| | *iv)* மவ்லவி அஹ்மத் ஹஸன், த/பெ மவ்லவி அலி அஹ்மத் | ரூ. 5/- | ” |
| | *v)* குலாம் நபி கான், எழுத்தர், நஸாமத் காரம்கார் | ரூ. 5/- | ” |
| | *vi)* காலே கான், நாஸிம், காரம்கார் | ரூ. 5/- | ” |
| | *vii)* டாக்டர் ஷேக் கரீமுல்லாஹ், நாஸிம், நோய் தடுப்பு சுகாதாரம் | ரூ. 5/- | ” |
| | *viii)* ஷேக் .பக்ருத்தீன், சிவில் ஜட்ஜ் | ரூ. 5/- | ” |
| | *ix)* சய்யிது இனாயத் அலி ஜர்னயில் | ரூ. 5/- | ” |
| | *x)* பெல்லோ கான், ஜமாதர் ஜெயில்ஸ் | ரூ. 5/- | ” |
| | *xi)* மீர் ஷத்ருத்தீன், ஆவணக் காப்பாளர், நஸாமத் கார்மர்கார் | ரூ. 5/- | ” |
| | *xii)* மீர் ஹிதாயத் ஹுஸைன், பாஸ்லி, நஸாமத் ஸிர்ஹிந்த் | ரூ. 5/- | ” |
| | *xiii)* சய்யிது நியாஸ் அலி, நாஸிம், கால்வாய்கள் | ரூ. 5/- | ” |
| | *xiv)* சய்யிது நிஸார் அலி, அட்வகேட், ஆணையரகம், அம்பாலா | ரூ. 5/- | ” |
| 2. | ஹஸ்ரத் .ஃபக்ருத் தவ்லா நவாப் மிர்ஸா முஹம்மத் அலாவுத்தீன் அஹ்மத் கான் பஹதுர், லோஹாரு மாகாணத்தின் ஆளுனர் | ரூ. 40/- | நூல் வாங்கு -வதற்காக ரூ. 20/- நன்கொடை -யாக ரூ. 20/- |
| 3. | மவ்லவி முஹம்மத் சராக் அலி கான் பஹதுர், உதவி செயலர், ஹைதராபாத் தக்கன் | ரூ. 10/- | வெளியிடு -வதற்கான நன்கொடை -யாக மட்டும் |
| 4. | நவாப் குலாம் மஹ்பூபே சுப்ஹானி பஹதுர், தலைவர், லாஹூர் | ரூ. 5/- | ” |
| 5. | முஹம்மத் அப்துல்லாஹ் பிஹாரி, தலைவர், கல்கத்தா | ரூ. 5/- | வெகுமதி |
| 6. | நவாப் முகர்ரமுத் தவ்லா, சதரல் மஹம், (தலைமை அலுவலர்), நிலவருவாய், ஹைதராபாத் மாகாணம் | ரூ. 10/- | ” |
| 7. | நவாப் அலி முஹம்மத் கான் பஹதுர், தலைவர், சஜ்ஜார் | ரூ. 5/- | ” |
| 8. | குலாம் காதிர் கான் பஹதுர், மினிஸ்டர், நலகார் மாகாணம். | ரூ. 5/- | ” |
| 9. | மாலிக்யார் கான், இன்சார்ஜ், பட்டாலா காவல் நிலையம் | ரூ. 2/- | நன்கொடை |
| 10. | அஸீமுல்லா கான், ஜூனியர் கமிஷன்ட் ஆ.ஃபீஸர், ட்ரூப்-5, முதலாவது ரெஜிமென்ட், மொமினாபாத் கேன்ட், ஹைதராபாத் | ரூ. 5/- | நூல் வாங்கு -வதற்காக |
| 11. | மவ்லவி அப்துல் ஹமீது, மேஜிஸ்ரேட், ஜலாலாபாத், பெரோஸ்பூர் மாவட்டம் | ரூ. 2/- மற்றும் 8 அனா | வெகுமதி |

| | | | |
|---|---|---|---|
| 12. | மியான் ஜான் முஹம்மத், காதியான் | ரூ. 1/- | நன்கொடை |
| 13. | மியான் குலாம் காதிர், காதியான் | ரூ.10/- | ரூ. 5/- நூல் வாங்கு -வதற்காக ரூ. 5/ நன்கொடை |
| 14. | நவாப் அஹ்மத் அலி கான், போபால், | ரூ. 5/- | நூல் வாங்கு -வதற்காக |
| 15. | மவ்லவி குலாம் அலி, டெபுடி சூபரின்டென்டென்ட், தஹ்ஸீல் முஸ.்.பர்கர் | ரூ. 5/- | வெகுமதி |
| 16. | மியான் கரீம் பக்ஷ், அஸிஸ்டென்ட் மேனேஜர், தெஹ்ஸில் முஸ.்.பர்கர் | ரூ. 5/- | ” |
| 17. | காஸி மஹபூஸ் ஹுஸைன், மேனேஜர், தெஹ்ஸில் முஸ.்.பர்கர் | ரூ. 5/- | ” |
| 18. | மியான் ஜலாலுத்தீன், ஆவண காப்பாளர், முஸ.்.பர்கர் | ரூ. 5/- | ” |
| 19. | ஷேக் அப்துல் கரீம், நீதிமன்ற எழுத்தர், முஸ.்.பர்கர் | ரூ. 5/- | ” |
| 20. | மியான் அக்பர், பல்லோவால், குர்தாஸ்பூர் மாவட்டம் | 2 அனா | நன்கொடை |

(தொடரும்...)

*(18 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

### மஸ்ஜிதுல் மஹ்தி

மஹ்தியின் பள்ளிவாயில் இங்கிலாந்தின் வடக்குப் பகுதியிலுள்ள Brad ford (பிராட்.்.போர்டு) என்ற இடத்தில் அமைந்திருக்கின்ற மஸ்ஜிதுல் மஹ்தி என்ற பள்ளிவாயிலைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த மஸ்ஜிதை ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 7.11.2008 அன்று திறந்து வைத்தார்கள். இந்த மஸ்ஜிது நகரத்திலேயே மிகவும் உயரமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாக இங்கிருந்து நகரத்தின் பல பகுதிகளைப் பார்க்க முடிந்தது.

### தாருல் அமான் மஸ்ஜிது

மான்செஸ்டர் (Manchester)-ல் அமைந்துள்ள இந்த மஸ்ஜிதுக்கான கட்டடப் பணி 2007-ஆம் ஆண்டு தொடங்கியது. இதை ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 27, ஏப்ரல் 2012-ல் திறந்து வைத்தார்கள். எங்களுக்கு சுற்றுலாவில் இங்கும் ஒருநாள் இரவு தங்குவதற்கும், தொழுவதற்கும் தர்ஸ் கேட்பதற்கும் வாய்ப்பு கிடைத்தது.

### ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் இரண்டாவது சந்திப்பு

நாங்கள் நாடு திரும்பும் முன்னர் இரண்டாம் முறையாக ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திப்பதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பம் கொடுத்தோம். ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுடன் அனுமதி அளித்த போது மீண்டும் ஒருமுறை அனைவரும் சேர்ந்து ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போதும் ஹுஸுூர் அவர்கள், நீங்கள் இன்னும் இங்கேதான் இருக்கின்றீர்களா? எப்போது திரும்பிச் செல்ல இருக்கிறீர்கள் என்று எங்களிடம் கேட்டார்கள். அதற்கு நாங்கள் நாளை திரும்பிச் செல்லவிருக்கிறோம் என்று கூறினோம், பிறகு ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நாஸிர் அ.்.லா மவ்லானா முஹம்மது இன்ஆம் கவ்ரி சாஹிப் அவர்களிடம், ஜல்சாவில் உங்களின் சொற்பொழிவும் இருந்தது அல்லவா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், ‘ஆம்’ என்று கூறவே, மக்கள் உங்கள் சொற்பொழிவைப் பற்றி எப்படி இருந்தது என்று கூறுகிறார்கள் என்று ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நகைச்சுவையாகக் கேட்டார்கள். உங்களுக்கு 80 வயது ஆகி விட்டதல்லவா என்று கேட்டார்கள். அதற்கும் அவர், ஆம் என்று கூறவே, பிறகு பணி நிறைவு பெற வேண்டாமா? அல்லது வேலை செய்ய வேண்டுமா என்றும் கேட்டார்கள். அதற்கும் அவர் ஒன்றும் கூற முடியாமல் அமைதியாக புன்னகைத்தவாறு இருந்தார்கள். நாஸிர் பைத்துல் மால் ஜனாப் ர.்.பீக் அஹ்மது பேக் அவர்களைப் பார்த்து, நீங்கள் என்ன பொறுப்பில் இருக்கிறீர்கள் எனக் கேட்க அவர், நான் நாஸிர் பைத்துல் மால் ஆமது பொறுப்பில் இருக்கிறேன் என்று கூறினார். அதைக் கேட்ட ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அவரிடம், நீங்கள் இனிமேல் நீங்களே அதிகம் சந்தாக்களை வசூலித்துக் கொள்ள வேண்டியது வரும். இல்லையென்றால், 1947-ஆம் ஆண்டில் நடந்தது போன்று முபல்லிக்மார்களுக்கு சம்பளம் கொடுப்பது கூட கடினமாகி விடும் என்று நினைவூட்டினார்கள். (1947-ல் சந்தா வசூலாகாத இக்கட்டான காலத்தில் முபல்லிக்மார்களுக்கு சம்பளம் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்). மேலும் ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலிடத்தின் பணியாளர்களிடம், உங்களில் ஒருவர் சந்தா வசூலிப்பவ -ராகவோ, மொழியக்கப் பணி செய்பவராகவோ இருந்தாலும் அனைவரும் தப்லீக்கும் செய்ய வேண்டும். உங்கள் துறைக்கான பணியை செய்தால் மட்டும் போதாது என்றும் அறிவுரை கூறினார்கள். வங்கத்தைச் சேர்ந்த ஒரு மவ்லவி சாஹிப் ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம், ஹுஸுூர் அவர்களே! தாங்கள் இந்தியா வாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு ஹுஸுூர் அவர்கள் புன்சிரித்தவாறு, உங்கள் மோடி அவர்களோ.......... என்று கூறியவாறு நிறுத்திக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




ஆக, ஹுஸுூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கும் இந்தியா வருவதற்கு விருப்பம் இருக்கிறது. ஆனால் சூழ்நிலை அமையவில்லை என்பதை சூசகமாக குறிப்பிட்டார்கள் எனப் புரிந்து கொள்ள முடிந்தது. பிறகு எங்களின் விருப்பத்தை அறிந்து கொண்ட ஹுஸுூர் (அய்யத -ஹுல்லாஹ்) அவர்கள் குரூப் .்.போட்டோ எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கியதால் குரூப் .்.போட்டோ எடுத்துக் கொண்டோம்.

இறுதியில் இந்தப் பயணத்தை அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்கி வைப்பானாக. தமிழ் மொழியாக்கப் பணியில் இன்னும் கூடுதலான ஆர்வதுடன் விரைவாக பயணிக்கும் நல்வாய்ப்பை அல்லாஹ் எனக்குத் தந்தருள துஆ செய்யுமாறு வேண்டுகோள் வைத்தவாறு நிறைவு செய்கிறேன்.

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam